# தமிழ்நாடு
# மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
# தேர்தல் ஆணையம்

## தேர்தல் நடத்தும்
## அலுவலர்களுக்கான கையேடு

## 2013

# கூட்டுறவுச் சங்கங்களின்
# தேர்தல் கையேடு

(அலுவலர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்)

## தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
## தேர்தல் ஆணையம்
## சென்னை

**ம.ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு)**
**ஆணையர்**

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்**
**தேர்தல் ஆணையம்,**
**சென்னை – 18.**

# முன்னுரை

இந்திய அரசியலமைப்புச்சட்டம் (97வது திருத்தம்) மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983, ஆகியவற்றில் கூறப்பட்டபடி, தன்னார்வ அமைப்பு (Volunatary Formation), தன்னாட்சி முறை (Autonomous Functioning), மக்களாட்சி நெறிமுறை (Democrtic Control) மற்றும் தொழில்முறை நிர்வாகம் (Professional Management) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளின் தேர்தல் பணி மிக சிறப்பானதும், பொறுப்பானதும் ஆகும்.

ஒவ்வொரு கூட்டுறவுச்சங்கத்திற்கும், வாக்காளர்பட்டியல் தொடங்கி, வாக்கு எண்ணிக்கை நடத்தி, தேர்தல் முடிவு அறிவிக்கும் வரை ஒவ்வொரு சங்கமும் ஒரு தனித்தொகுதியாக (constituency) இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் அனைத்துவகைப் பதிவாளர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட, நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான மிகப்பெரிய தேர்தல் ஒன்றினை சுதந்திரமாகவும், சட்ட விதிகளின்படி முறையாகவும் (free and fair) நடத்திடவேண்டிய மாபெரும் பொறுப்பு தேர்தல் ஆணையத்திற்குள்ளது.

தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் உதவிட தேர்தல் ஆணையத்தின் இக்கையேடு பயன்படும். தேர்தல் தொடர்பாக கூட்டுறவுச்சட்டம் மற்றும் விதிகளில் சொல்லப்பட்டதின் அடிப்படையில் இக்கையேடு அமைந்துள்ளது என்றாலும், இதனையே முழுமையானது மற்றும் முற்றானது எனக் கொள்ளாது கீழ்க்கண்டவற்றை நன்கு படித்து அறிந்து கொள்ள வேண்டும்.

1. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 (தேர்தல் தொடர்பாகச் சொல்லப்பட்டவை);
2. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988 (தேர்தல் தொடர்பாகச் சொல்லப்பட்டவை);
3. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் சட்டபூர்வமான ஆணைகள், கட்டளைகள், அறிவுரை கையேடுகள் மற்றும் சுற்றறிக்கைகள்.

இத்தேர்தலில், பல்வேறு தகுதிகளிலும், நிலைகளிலும், பணியாற்றும் அனைத்து அலுவலர்களும் தமக்கு உள்ள மற்றும் இடப்பட்ட பணிகளையும், கடமைகளையும் மற்றும் பொறுப்புகளையும் நன்கறிந்து, நன்குணர்ந்து எவ்வித குறைகளுக்கும், புகார்களுக்கும் இடமின்றி செம்மையாக நிறைவேற்றுவார்கள் என்று தேர்தல் ஆணையம் உறுதியாக எதிர்பார்க்கிறது.

**ஆணையர்.**

# உள்ளடக்கம்


| வ.எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | **பொது** | 6 |
| 2. | **தேர்தல் செயலாக்கம்** | 7 |
| | (1) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் மற்றும் தேர்தல் ஆணையர் | 7 |
| | (2) மாநிலத் தேர்தல் அலுவலர் | 7 |
| | (3) மாவட்டத் தேர்தல் அலுவலர் | 8 |
| | (4) வாக்காளர் பட்டியல் அலுவலர் | 8 |
| | (5) தேர்தல் அலுவலர் | 9 |
| | (6) மாற்றுத் தேர்தல் அலுவலர் | 9 |
| | (7) வாக்குப்பதிவு அலுவலர் | 10 |
| 3. | **தேர்தல் விதிமுறைகள்** | 10 |
| | (1) தேர்தல் செயல்முறைத் திட்டம் | 10 |
| | (2) தேர்தல் அறிவிப்பு | 12 |
| | (3) உறுப்பினர் பட்டியல் மற்றும் வாக்காளர் பட்டியல் | 15 |
| | (4) வேட்பு மனு | 18 |
| | i) தாக்கல் | 18 |
| | ii) பரிசீலித்தல் | 20 |
| | iii) திரும்பப் பெறுதல் | 22 |
| | iv) வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் | 22 |
| | (5) வாக்குப்பதிவு | 25 |
| | (6) வாக்கு எண்ணிக்கை | 31 |
| | (7) முடிவு அறிவித்தல் | 33 |
| | (8) தேர்தல் நிறுத்தப்படுதல் | 34 |
| | (9) தேர்தலுக்கான இடங்கள் | 35 |
| | (10) தேர்தல் ஆவணங்கள் | 37 |
| 4. | **தேர்தல் ஆணையம் தேர்தலை நிறுத்தும் நேர்வுகள்** | 37 |
| 5. | **தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு தேர்தல்** | 38 |
| 6. | **நிர்வாகிகள் தேர்தல்** | 40 |
| 7. | **வேட்பாளர் தகுதியின்மைகள்** | 44 |
| 8. | **தேர்தல் தொடர்பான குற்றச் செய்கைகள் மற்றும் தண்டனைகள் (சட்டப்பிரிவு 162)** | 48 |
| 9. | **தேர்தல் ஆணையம்** | 49 |
| 10. | **இணைப்புகள்** | 55 |

# கூட்டுறவுச் சங்கங்களின்
# தேர்தல் கையேடு

## I. பொது:

**1.1.** தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவிற்கான தேர்தல்கள் 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் (இனிவரும் இடங்களில் கூட்டுறவுச் சட்டம்) மற்றும் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் (இனிவரும் இடங்களில் விதிகள்) ஆகியவற்றின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன.

**1.2.** தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு உதவிட இக்கையேடு பயன்படும். இக்கையேடு தேர்தல் தொடர்பாக கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் சொல்லப்பட்டவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. எனினும் கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளில் சொல்லப்பட்டவையே முழுமையானதும் இறுதியானதுமாகும்.

**1.3.** இக்கையேட்டில் தேர்தல் எனக் குறிப்பிடப்படும் இடங்கள் அவை கூட்டுறவுச் சங்க தேர்தல்கள் எனக் கொள்ள வேண்டும்.

# 2. தேர்தல் செயலாக்கம்

## 2.1 <u>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் மற்றும் தேர்தல் ஆணையர்</u>

**2.1.1.** கூட்டுறவுச் சட்டம் பிரிவு **33–**A-ன் கீழ், தேர்தல் ஆணையர் ஒருவரை உள்ளடக்கிய தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

**2.1.2.** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் அனைத்திற்குமான வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதைக் கண்காணிப்பதும் மற்றும் தேர்தல்கள் நடத்துவதும் ஆகியவை இத்தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை கட்டுப்பாட்டிற்கு உள்ளடங்கியவைகள் ஆகும். (தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து விவரமாக பகுதி 9-ன் கீழ் தரப்பட்டுள்ளது).

**2.1.3** மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் (District Election Officers), வாக்காளர் பட்டியல் அலுவலர்கள் (Electoral officers), தேர்தல் அலுவலர்கள் (Election officers), வாக்குப்பதிவு அலுவலர்கள் (Polling Officers) மற்றும் பிற தேர்தல் பணிமேற்கொள்ளும் அலுவலர்கள் தேர்தல் பணிக்கென அமர்த்தப்பட்ட காவல்துறை அலுவலர்கள் உட்பட அனைவரும் தேர்தல்கள் முடியும்வரை மாநிலத் தேர்தல் ஆணையத்தின் அயற்பணிக்கு அனுப்பப்பட்டவர்களாகக் (on deputation) கருதப்படுவார்கள்.

(விதி 52–A-5)

## 2.2. மாநிலத் தேர்தல் அலுவலர் (State Election Officer)

2.2.1 கூட்டுறவுச் சட்டம் பிரிவு-3-ன்கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்களாகச் (Registrars) செயல்பட்டுவரும் அலுவலர்களை, மாநிலத் தேர்தல் அலுவலர்களாக (State Election Officers) மாநிலத் தேர்தல் ஆணையம் நியமிக்கலாம். மாநிலத் தேர்தல் அலுவலர்கள் அவரவர் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சங்கங்களுக்கு ஆணையத்தின்

கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வைக்குட்பட்டு வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிடுதல், நிர்வாகக்குழு தேர்தல் நடத்தப்படுவதை ஒருங்கிணைத்து கண்காணிக்கவேண்டும்.

(விதி 52-A-3)

**2.3.மாவட்டத் தேர்தல் அலுவலர் (District Election Officer)**

**2.3.1** மாநிலத் தேர்தல் ஆணையம், கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் நிலைக்கு (Rank)க்குறையாத அரசு அலுவலர்கள் அல்லது இதே பணிநிலைக்குக் குறையாத இதர அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோரை, தேவையான அளவிற்கு, மாவட்டத் தேர்தல் அலுவலர்களாக (District Election Officers) ஒவ்வொரு மாவட்டத்திற்கோ, அல்லது மாவட்டத்தின் ஒரு பகுதிக்கோ, அம்மாவட்டம் அல்லது மாவட்டத்தின் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் நடத்துவதற்கு நியமனம் செய்யலாம்.

**2.3.2.** மாவட்டத் தேர்தல் அலுவலர், சம்பந்தப்பட்ட சங்கம் அல்லது சங்கங்களின் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். இதற்கான அனைத்து உதவிகளையும் தொடர்புடைய சங்கம் மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு அளித்திடவேண்டும்.

(விதி 52-(1)(b)

**2.4. வாக்காளர் பட்டியல் அலுவலர்கள் (Electoral Officer)**

2.4.1 மாவட்டத் தேர்தல் அலுவலர், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த முதுநிலை கூட்டுறவு ஆய்வாளர் நிலைக்குக் குறையாத அலுவலர், அல்லது இதே பணிநிலைக்குக் குறையாத இதர அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோரை தேவையான எண்ணிக்கையில் வாக்காளர் பட்டியல் அலுவலராக நியமனம் செய்யலாம்.

**2.4.2.** தேர்தல் நடைபெறும் சங்கங்களின் வாக்காளர் பட்டியல் (Voters List) தயாரிப்பதும், அதனை வெளியிடுவதும் வாக்காளர் பட்டியல் அலுவலரின் பொறுப்பாகும்.

[விதி 52-(1)(c)]

**2.5. தேர்தல் அலுவலர் (Election Officer)**

2.5.1. மாவட்டத் தேர்தல் அலுவலர், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான எண்ணிக்கையில் அரசு அலுவலர்கள், அல்லது தன்கீழ் பணியாற்றும் அலுவலர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் (cooperative societies), மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (local authorities), மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள் (undertaking) மற்றும் கல்வி நிறுவனங்கள் (Educational Institution), ஆகியவற்றின் பணியாளர்கள் (Employees) ஆகியோரை தேர்தல் அலுவலர்களாக (Election Officers) நியமனம் செய்யலாம்.

2.5.2. தேர்தல் அலுவலர்கள் மாநிலத் தேர்தல் ஆணையத்தின் நெறிப்படுத்துதல், கட்டளைகள், கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்புக்குட்பட்டும், மாநிலத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர், ஆகியோரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலுக்குட்பட்டும், கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளில் கூறப்பட்டபடியும், தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் நெறிமுறைகளுக்குட்பட்டும், சங்கத்தின் தேர்தலை முறையாக நடத்துவதற்குப் பொறுப்பாவார்கள்.

(விதி 52(3) (a)]

**2.6. மாற்றுத் தேர்தல் அலுவலர் (Alternative Election Officer)**

மாவட்டத் தேர்தல் அலுவலர், தேவைப்படும் நேர்வுகளில் மாற்றுத் தேர்தல் அலுவலரையோ அல்லது அலுவலர்களையோ நியமிக்கலாம்.

(விதி 52(3) (b)]

## 2.7. வாக்குப்பதிவு அலுவலர் (Polling Officer)

**2.7.1.** தேர்தல் அலுவலர், தேர்தலை நடத்துவதற்கு தனக்கு உதவியாக ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டோ, தேவையான எண்ணிக்கையில் வாக்குப்பதிவு அலுவலர்களை நியமனம் செய்து கொள்ளலாம்.

(விதி 52 (4) (a) ]

**2.7.2** தேர்தல் தொடர்பாக கூட்டுறவுச் சட்டம், மற்றும் விதிகளில் சொல்லப்பட்டவைக்குட்பட்டு, வாக்குச்சாவடியில் ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டு, சுதந்திரமான மற்றும் முறையான (free and fair poll) தேர்தல் நடைபெறுவதை, உறுதி செய்வது தேர்தல் அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர் ஆகியோரின் பொதுவான கடமையாகும்.

(விதி 52 (4) (b) )

# 3. தேர்தல் விதிமுறைகள்

## 3.1 தேர்தல் செயல்முறைத்திட்டம் (Election Programme)

3.1.1. தேர்தல் ஆணையம் சங்கத்திற்கோ அல்லது பல சங்கங்களுக்கான தொகுப்பிற்கோ தேர்தல் நாளை நிர்ணயம் செய்து, தேர்தல் நடத்துவதற்கான ஒரு செயல்முறைத் திட்டத்தை தயாரித்து அத்தேர்தல் செயல்முறைத்திட்ட நகலை சங்கத்திற்கும் அல்லது தொகுப்பிலுள்ள அனைத்து சங்கங்களுக்கும், தொடர்புடைய மாநிலத் தேர்தல் அலுவலர்களுக்கும் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கும் வாக்குப்பதிவு நாளுக்கு குறைந்தபட்சம் **21** நாட்களுக்கு முன்னதாக அனுப்ப வேண்டும்.

(விதி 52(5) (a) )

**3.1.2.** இத்தேர்தல் திட்டம் கீழ்வரும் தகவல்களைக் கொண்டதாக அமையும்.

(விதி 52 (5) (b)

1. (i) சங்கம் உறுப்பினர்கள் பட்டியல் (Members list) தயாரித்து வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு, வழங்கவேண்டிய மற்றும் அதனை சங்க அலுவலகத்திலுள்ள அறிவிப்பு பலகையில் வெளியிடவேண்டிய நாள்;

(ii) வாக்காளர் பட்டியல் அலுவலர், வாக்காளர் பட்டியல் (Voter's list) தயாரித்து, அதனை சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் வெளியிடவேண்டிய நாள்;

(iii) வாக்காளர் பட்டியல் மீது உறுப்பினர்கள் கோரிக்கைகள் அல்லது மறுப்புகள் தெரிவிக்கவேண்டிய நாள்;

(iv) வாக்காளர் பட்டியல் மீது வரப்பெற்றுள்ள கோரிக்கைகள் அல்லது மறுப்புகள் மீது வாக்காளர் பட்டியல் அலுவலர் முடிவு வெளியிடும் நாள்;

2. சங்கம் உறுப்பினர்கள் பட்டியலை, மேலே இனம் 1 (i)-ல் குறிப்பிடப்பட்ட நாளுக்குள் தயாரித்து, வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு வழங்காவிட்டால்:-

(i) வாக்காளர் பட்டியல் அலுவலர், வாக்காளர் பட்டியல் தயாரித்து அதனை சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் வெளியிடவேண்டிய நாள்;

(ii) வாக்காளர் பட்டியல் மீது உறுப்பினர்கள் கோரிக்கைகள் அல்லது மறுப்புகள் தெரிவிக்கவேண்டிய நாள்;

(iii) வாக்காளர் பட்டியல் மீது வரப்பெற்றுள்ள கோரிக்கைகள் அல்லது மறுப்புக்கள் மீது  வாக்காளர் பட்டியல் முடிவு வெளியிடும் நாள்

| | நாள் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 3. (i) வேட்புமனுக்கள் தாக்கல் செய்தல் : | | | |
| (ii) வேட்புமனுக்கள் ஆய்வு, மற்றும் தகுதிவாய்ந்த வேட்புமனுக்கள் பட்டியலை வெளியிடுதல் : | | | |
| (iii) வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுதல் : | | | |
| (iv) போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் வெளியிடுதல் : | | | |
| (v) வாக்குப்பதிவு தேவைப்படின், (போட்டி–யிடுகின்ற இறுதி வேட்பாளர்களின் எண்ணிக்கைக் அதிகமாக இருந்தால்) வாக்குப்பதிவு நடக்கும் முகவரியுடன் : | | | |

**3.1.3.** வாக்குப் பதிவு நாளுக்கும் (Date of Polling) வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நாளுக்கும் குறைந்த பட்சம் 3 முழு நாட்கள் (3 clear days) இடைவெளி இருத்தல் வேண்டும்.

**3.1.4.** ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளுக்கு அதே நாளில் வெவ்வேறு நேரங்களும், ஒரே நாளில் ஒரே இடத்தில் அல்லது வெவ்வேறு இடங்களில் வாக்குப்பதிவு நடத்த இயலாத நிலையில் வாக்குப்பதிவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நாட்களையும் நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

(விதி 52 (5) (b) )

## 3.2. தேர்தல் அறிவிப்பு:

**3.2.1** மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது தேர்தல் அலுவலர், தேர்தல் அறிவிப்பை, சங்கத்தின் வாக்குப்பதிவு நாளுக்கு 30 தினங்களுக்கு முந்தைய நாளில், அச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்துள்ள உறுப்பினர்களுக்கு, அனுப்பவேண்டும். இத்தேர்தல் அறிவிப்பு குறைந்தபட்சம் வாக்குப்பதிவு நாளுக்கு முழு 15 நாட்களுக்கு (15 clear days) முன்பாக அனுப்பப்படவேண்டும்.

**3.2.2.** தேர்தல் அறிவிப்பில் கீழ்க்கண்ட விவரங்கள் அடங்கி இருக்க வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | சங்கத்தின் பெயர் | : | | | |
| (2) | (i) தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிர்வாகக் குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | : | | | |
| | (ii) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. அதில் மகளிருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. | : | | | |
| | (iii) பொது இடங்களின் எண்ணிக்கை | : | | | |
| (3) | தொகுதிகளிருப்பின், தொகுதிகளின் பெயர் மற்றும் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை | | | | |
| (4) | | | நாள் | இடம் | நேரம் |
| | அ) வேட்பு மனு தாக்கல் | : | | | |
| | ஆ) வேட்பு மனு ஆய்வு | : | | | |
| | இ) வேட்பு மனு திரும்பப் பெறல் | : | | | |
| | ஈ) வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியிடுதல் | : | | | |
| (5) | போட்டியிருப்பின் வாக்குப்பதிவு நடைபெறுதல் (இடத்தின் பெயர் மற்றும் முகவரி உட்பட) | : | நாள் | இடம் | நேரம் |
| (6) | வாக்கு எண்ணிக்கை நடைபெறுதல் | : | நாள் | இடம் | நேரம் |

**குறிப்பு** :- வேட்பு மனு தாக்கல் நாளுக்கு மறுநாள் வேட்பு மனு திரும்பப் பெறல் நாளாக இருத்தல் வேண்டும்.

(விதி 52 (6) (a) )

3.2.3. தேர்தல் அறிவிப்பு பின்வரும் வகைகளில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வகையிலோ அனுப்பப்படல் வேண்டும்.

(1) சம்பந்தப்பட்ட உறுப்பினரிடம் அதனை கொடுத்தல் அல்லது வழங்குதல் (giving or tendering), உறுப்பினரிடம் நேரில் வழங்க இயலாத நிலையில் வயது வந்த அவருடைய குடும்ப உறுப்பினரிடம் (adult family member) அவருடைய ஒப்புகை பெற்று கொடுத்தல் அல்லது வழங்குதல், அல்லது

(2) மின்னணு அஞ்சல் (e-post) அல்லது

(3) அரசு விளம்பரங்களை வெளியிடுவதற்கு அரசால் அனுமதிக்கப்பட்டு, சங்க செயற்பாட்டு பகுதியில் விநியோகத்தில் (Circulation) உள்ள, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூர் செய்தித்தாள்களில் வெளியிடுதல்.

**3.2.4** மேலே சொல்லப்பட்ட வகையில் ஏதேனும் ஒன்றின்வழி அனுப்புவதுடன், மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது தேர்தல் அலுவலர் தேவையென்று கருதினால், சங்கத்தின் செயற்பாட்டு பகுதிக்குட்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முக்கியமான பொது இடங்களில் இத்தேர்தல் அறிவிப்பை பார்வைக்கு வைக்கலாம் (Display)

(விதி 52 (6) (b) )

**3.2.5.** தேர்தல் அறிவிப்பினை பின்வரும் வகைகளிலும் வெளியிடுதல் வேண்டும்;

(1) சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகை (Notice Board)

(2) சங்கத் தலைமையகம் அல்லாத வேறு இடத்தில் தேர்தல் நடைபெறுமாயின்;

(i) அந்த இடத்தில் உள்ள சங்கக் கிளையின் அறிவிப்பு பலகை அல்லது

(ii) இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது தேர்தல் அலுவலரால் குறிப்பிடப்படும் வேறு இடங்கள்

(விதி 52 (6) (c) )

3.2.6. மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது தேர்தல் அலுவலர் அறிவுறுத்தியவாறு சங்கத்தின் தலைமை நிர்வாகியோ (Chief Executive), தலைமை நிர்வாகி இல்லாத இனங்களில், சங்கத்தின் தலைவரோ (President or Chair person) இத்தேர்தல் அறிவிப்பை உறுப்பினர்களுக்கு வழங்கிட ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

(விதி 52 (6) (d) )

**3.2.7.** இத்தேர்தல் அறிவிப்பினை அனுப்புவதற்கோ அல்லது வெளியிடுவதற்கோ ஏற்படும் செலவினை சங்கமே ஏற்கவேண்டும்.

(விதி 52 (6) (e) )

**3.3. உறுப்பினர் பட்டியல் மற்றும் வாக்காளர் பட்டியல் (Members list & Voters list):-**

**3.3.1.** தேர்தல் ஆணையத்தால் தொடர்புறுத்தப்பட்ட தேர்தல் செயல்முறைத்திட்டம் கிடைக்கப்பெற்றதும், சங்கம், உடனடியாக சங்கத்தின் வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய 30வது நாளில் சங்க உறுப்பினர்களாக உள்ள (on the date thirty days prior to the date of poll) மற்றும் கூட்டுறவுச் சட்டம், விதிகளின்படி சங்கத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள, அனைத்து உறுப்பினர்களின் பட்டியலை (Members list) தயாரித்திடவேண்டும். மேலும் தொகுதிகள் இருப்பின், தொகுதிவாரியான உறுப்பினர் பட்டியல் தயாரித்திட வேண்டும். இப்பட்டியல் அப்பகுதியின் வழக்கு மொழியில் (Vernacular) தயாரிக்கப்படவேண்டும். உறுப்பினர் பதிவேட்டில் (admission register) கண்டுள்ள உறுப்பினர் வரிசை எண்படி இப்பட்டியல் இருத்தல் வேண்டும்.

(விதி 52 (7) (a) )

**3.3.2.** உறுப்பினர் பட்டியலில் கீழ்வரும் விவரங்கள் இருத்தல் வேண்டும்

(1) தனிநபர் உறுப்பினராக (individual member) இருப்பின், உறுப்பினர் பெயர், உபபெயர் (surname if any), உறுப்பினர் எண், தகப்பனார் அல்லது கணவரின் பெயர், உறுப்பினர் புத்தகத்தில் பதியப்பட்டபடியான (as entered and available) உறுப்பினரின் முகவரி, உறுப்பினர் ஏதேனும் தொகுதியைச் (constituency) சேர்ந்தவராக இருப்பின், அத்தொகுதியின் பெயர்;

(2) உறுப்பினர் இணைக்கப்பெற்ற சங்கமாக இருப்பின், அச்சங்கத்தின் பெயர், பதிவு எண், முகவரி, உறுப்பினர் எண், மற்றும் பிரதிநிதியின் (delegate) பெயர், அப்பிரதிநிதியின் தற்போதைய பதவிக்காலம் முடிவுறும் நாள் (date of expiry of the current term).

(விதி 52 (7) (b) )

3.3.3. சங்கம் உறுப்பினர் பட்டியலின் மூன்று நகல்களை குறைந்தபட்சம் வாக்குப்பதிவு நாளுக்கு 15 முழு நாட்களுக்கு முன்னதாகவே வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு அனுப்பிட வேண்டும். (விதி 52 (7) (c) )

**3.3.4.** வாக்காளர் பட்டியல் அலுவலர், சங்கத்தால் அனுப்பப்பட்ட உறுப்பினர் பட்டியலை (members list) சங்க ஆவணங்களுடன் சரிபார்த்து, வாக்குப்பதிவு நாளுக்கு முந்தைய 30வது நாளில் சங்க உறுப்பினர்களாக உள்ள மற்றும் கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின்படி தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற உறுப்பினர்களின் பட்டியலைத் தயாரிக்க வேண்டும் (இனிவரும் இடங்களில் வாக்காளர் பட்டியல் (voters list) என அழைக்கப்படும்). வாக்காளர் பட்டியல், சங்க உறுப்பினர் பதிவேட்டில் உள்ள உறுப்பினர் எண் வரிசைப்படி உறுப்பினர்கள் பெயர் கொண்டதாக வழக்கு மொழியில் (Vernacular) இருத்தல் வேண்டும்.

**3.3.5** இந்த வாக்காளர் பட்டியலில் கீழ்வரும் விவரங்கள் இருத்தல் வேண்டும்.

(1) தனிநபர் உறுப்பினராக (individual member) இருப்பின், உறுப்பினர் பெயர், உபபெயர் (surname if any), உறுப்பினர் எண், தகப்பனார் அல்லது கணவரின் பெயர், உறுப்பினர் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளவாறு (as entered and available) உறுப்பினரின் முகவரி மற்றும் உறுப்பினர் ஏதேனும் தொகுதியைச் (constituency) சேர்ந்தவராக இருப்பின், அத்தொகுதியின் பெயர்;

(2) உறுப்பினர் இணைக்கப்பெற்ற சங்கமாக இருப்பின், அச்சங்கத்தின் பெயர், பதிவு எண், முகவரி, உறுப்பினர் எண், பிரதிநிதியின் (delegate) பெயர், மற்றும் அப்பிரதிநிதியின் தற்போதைய பதவிக்காலம் முடிவுறும் நாள் (date of expiry of the current term)

(விதி 52 (7) (d)

(3) வாக்காளர் பட்டியல் அலுவலர், வாக்காளர் பட்டியலை சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில், (Notice Board) குறைந்தபட்சம் வாக்குப்பதிவு நாளுக்கு 10

முழு நாட்களுக்கு முன்னதாக வெளியிடவேண்டும். இப்பட்டியல் மீது கோரிக்கைகள் மற்றும் மறுப்புகள் ஏதும் இருப்பின் உறுப்பினர்கள் எக்காரணத்தினால் மற்றும் எதனடிப்படையில் அக்கோரிக்கை எழுப்பப்படுகிறது, அல்லது மறுப்பு தெரிவிக்கப்படுகிறது என்ற விவரங்களைக் கொண்ட ஒரு மனுவினை, பட்டியல் வெளியிடப்பட்ட 2 தினங்களுக்குள் தம்மிடம் அளிக்க வேண்டும் என வாக்காளர் பட்டியல் அலுவலர் அதில் தெரிவித்திருக்க வேண்டும்.

(விதி 52 (7) (f))

(4) வாக்காளர் பட்டியல் அலுவலர், தன்னால் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் மீது பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் மறுப்புகள் மீது, தேவை என்று அவரால் கருதப்படும் இனங்களின் மீது, உரிய விசாரணை மேற்கொண்டு அதன் மீது எழுத்து பூர்வமாக முடிவெடுத்து (Shall decide in writing), திருத்தங்கள் தேவை என்று கருதப்படும் இனங்களில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு, திருத்தங்களுடனான பட்டியலை சங்க அலுவலகத்தில் உள்ள தகவல் பலகையில், குறைந்தபட்சம் வேட்பு மனு தாக்கல் செய்யும் நாளுக்கு இருநாட்களுக்கு முன்னதாக, வெளியிடவேண்டும். உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கோரிக்கைகள் மற்றும் மறுப்புகள் மீது முடிவெடுக்க சங்கத்திற்கு சொந்தமான மற்றும் சங்க வசமுள்ள (belong to or custody) கணக்குகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை சரிபார்க்க வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு முழு உரிமை (Free access) உண்டு.

(விதி 52 (7) (g) )

(5) ஏதேனும் ஒரு சங்கம், நிர்ணயிக்கப்பட்ட நாட்களுக்குள் உறுப்பினர் பட்டியலை வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு அனுப்பத் தவறும் நிலையில், (விதி 52 (7) (c), வாக்காளர் பட்டியல் அலுவலர், தானாகவோ அல்லது தன்னால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதாவது நபர்

மூலமாகவோ வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். அதற்கான செலவினங்களை அச்சங்கமே ஏற்க வேண்டும். இம்மாதிரி நிகழ்வுகளில், வாக்காளர் பட்டியல் அலுவலர் தாமாகவே, சங்க அலுவலகத்தில் உள்ள தகவல் பலகையில், குறைந்தபட்சம் வாக்குப்பதிவு நாளுக்கு 7 முழு நாட்களுக்கு முன்னதாக, வெளியிடவேண்டும். மேலே வரிசை எண் (3)-ல் கூறப்பட்டபடியான கோரிக்கைகள் மற்றும் மறுப்புகளை பட்டியல் வெளியிட்ட ஒரு நாளுக்குள் அளிக்கும்படியும் கோரியிருத்தல் வேண்டும். மேலே (4)ல் சொல்லப்பட்டபடியான திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை, வாக்காளர் பட்டியல் அலுவலர் குறைந்தபட்சம் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் நாளுக்கு முந்தைய நாளில் வெளியிடவேண்டும்.

(விதி 52 (7) (h) )

## 3.4. வேட்புமனு: (Nomination)

### 3.4.1. தாக்கல்:

(1) சங்க வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று மற்றும் கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் சங்க நிர்வாகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுள்ளவரைத் தவிர வேறு எவரும் வேட்பு மனு தாக்கல் செய்ய இயலாது.

ஆனால் தனி நபர் உறுப்பினர்களாக இல்லாத மைய மற்றும் தலைமை சங்கங்களின் நிர்வாகக் குழு தேர்தலில் மட்டும் மகளிர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான தேர்தலில் வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத, ஆனால் விதி 52(7) – அன்படி தயாரிக்கப்பட்ட, சங்கத்தில் இணைக்கப்பட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினராக உள்ள மகளிர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு வேட்பு மனு தாக்கல் செய்யலாம்.

( விதி 52 (8) (a)

(2) வேட்பு மனு, விதிகளில் குறிப்பிட்ட படிவம் எண்.18ல் இருத்தல் வேண்டும். அம்மனுவில் வேட்பாளர் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும். வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வேறு இரு உறுப்பினர்கள், முன்மொழிபவராக ஒருவரும், வழிமொழிபவராக ஒருவரும் அதில் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும்.

(3) தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தவிர வாக்காளர் பட்டியலில் வேறு ஒரு உறுப்பினர் மட்டுமே இருந்தால், அந்த வேட்புமனு வழிமொழியப்படவேண்டிய அவசியமில்லை.

(4) தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தவிர, வாக்காளர் பட்டியலில் வேறு உறுப்பினர்கள் எவருமே இல்லையென்றால், அந்த வேட்பு மனுவை முன்மொழியவோ, அல்லது வழிமொழியவோ அவசியமில்லை.

(5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு போட்டியிடும் வேட்பாளர் தாம் தாக்கல் செய்யும் வேட்பு மனுவில், தாம் சார்ந்துள்ள இனம் (Caste) அல்லது பழங்குடியின் பெயரைக் குறிப்பிடுவதுடன், அந்த இனம் அல்லது பழங்குடி மாநிலத்தின் எந்தெந்தப் பகுதிகளில் அவ்வாறு அறிவிக்கை (Notify) செய்யப்பட்டுள்ளது என்றும் உறுதி (Declare) கூறவேண்டும்.

(விதி 52 (8) (a) )

(6) எந்த ஓர் தேர்தலிலும் ஒரு வேட்பாளர் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யலாம். ஆனால் வேட்பாளராலோ அல்லது அவரது சார்பாகவோ (on behalf) நான்கு வேட்புமனுக்களுக்குமேல் தாக்கல் செய்ய கூடாது.

(விதி 52 (8) (aa) )

ஒரு உறுப்பினர் தொகுதியில் போட்டியிட விரும்பும் வேட்பாளர் ஒருவர், வேறெந்த வேட்பு மனுவையும் முன்மொழிபவராகவோ அல்லது வழி மொழிபவராகவோ இருக்கக்கூடாது.

பல உறுப்பினர்கள் தொகுதியில் போட்டியிட விரும்பும் வேட்பாளர் ஒருவர், அந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஒன்று குறைவான எண்ணிக்கைக்கு வேட்பு மனுக்களை முன்மொழிபவராகவோ அல்லது வழி மொழிபவராகவோ இருக்கலாம்.

(7) வேட்புமனு வேட்பாளராலோ அல்லது அவரின் முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவராலோ, தேர்தல் அலுவலரிடம் நேரில் தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் (Date and time), தாக்கல் செய்யப்படல் வேண்டும். (விதி 52 (8) (b) )

(8) வேட்பு மனுவினைப் பெறும் தேர்தல் அலுவலர், வேட்பு மனுவில் அதன் வரிசை எண்ணை குறிப்பதுடன், வேட்புமனு அவரிடம் தாக்கல் செய்யப்பட்ட நாள், மற்றும் நேரத்தை வேட்பு மனு படிவத்தில் பதிவு செய்தல் வேண்டும். மேலும் அதனைப் பெற்றதற்கான ஒப்புகையும் அவர் (acknowledgement) உடன் அளித்திடல் வேண்டும்.

(விதி 52 (8) (c) )

### 3.4.2. பரிசீலித்தல் (Scrutiny)

(1) தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நாள், நேரம் மற்றும் இடத்தில் வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும். பரிசீலனையின்போது மறுப்புகள் ஏதேனும் தெரிவிக்கப்படும் நிலையில் அதனை பரிசீலித்து முடிவினை எழுத்து மூலமாக (in writing) பதிவு செய்தல் வேண்டும். வேட்புமனுக்கள் தொடர்பாக தெரிவிக்கப்படும் மறுப்புகள் மீதோ, அல்லது தாமாகவோ (own motion), தேவையென்று கருதினால் அதனை விசாரித்து, கீழ்வரும் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் (grounds) எந்த ஒரு வேட்பு மனுவினையும் தள்ளுபடி (reject) செய்யலாம்;

(i) வேட்புமனு தாக்கலுக்காக நிர்ணயிக்கப்பட்ட நாளன்று வேட்பாளர் கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் போட்டியிடும் இடத்திற்கு தேர்ந்தெடுக்கப்படத் தகுதி

இல்லாதவராகவோ, (not qualified) அல்லது தகுதி இழந்தவராகவோ (Disqualified) இருந்தால்;

(ii) உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தால்;

(iii) தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவில் காணப்படும் வேட்பாளர், முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர் ஆகியோரின் கையொப்பங்களில் ஏதேனும் ஒன்று உண்மையாக (genuine) இல்லாமல் இருந்தால்;

(iv)ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோருக்கான ஒதுக்கப்பட்ட இடத்திற்கு போட்டியிடும் வேட்பாளர் அவ்வாறு ஒதுக்கப்பட்ட வகையைச் சாராதவராக இருந்தால்;

(2) வேட்பாளர், அல்லது முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவர் ஆகியோரின் அடையாளம் குறித்து (identity) சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக்கப்படும் நிலையில் (established beyond reasonable doubt) வாக்காளர் பட்டியலில் அவர்கள் பெயர் மற்றும் விபரங்களில் காணப்படும் சிறிய தவறுகள் அடிப்படையில் மட்டும் அந்த வேட்புமனுவினை தள்ளுபடி செய்தல் கூடாது. (விதி 52 (8) (d) )

(3) வேட்பாளர்களின் அனைத்து வேட்பு மனுக்களையும் பார்வையிட்டு, வேட்பாளராக அவர்களைச் சேர்த்திருப்பது முறையானதுதான் (Valid) என்று அறிந்து கொள்ளும் வகையில், வேட்பாளர்களுக்கோ அல்லது அவர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட நபர்களுக்கோ, தேவையான / நியாயமான அனைத்து உதவிகளையும் தேர்தல் அலுவலர் வழங்கிடவேண்டும்.

(விதி 52 (8) (e) )

(4) தேர்தல் அலுவலர் ஒவ்வொரு வேட்புமனுவிலும், அதனை அவர் ஏற்றுக்கொள்கிறாரா அல்லது தள்ளுபடி செய்கிறாரா என்ற முடிவினை பதிவு செய்வதுடன்

வேட்புமனு தள்ளுபடி செய்யப்படுவதானால், அதற்கான காரணங்களைச் சுருக்கமாக எழுத்து மூலம் அதில் பதிவு (record) செய்ய வேண்டும்.

(விதி 52 (8) (f) )

(5) பின்னர் தேர்தல் அலுவலர், வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து வேட்பாளர்களின் பட்டியல் ஒன்றினைத் தயாரித்து தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் சங்க அலுவலக அறிவிப்பு பலகையிலோ அல்லது அவரால் குறிப்பிடப்படும் (specify) வேறு ஒரு இடத்திலோ வெளியிடவேண்டும்.

(விதி 52 (8) (g) )

### 3.4.3. திரும்பப்பெறுதல்

தேர்தல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்திற்குள் உரிய அறிவிப்பினை படிவம் எண்.19ல் வேட்பாளரால் கையொப்பிடமிட்டு, அவரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அவரது முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவரோ தேர்தல் அலுவலரிடம் நேரடியாகக் கொடுத்து தனது வேட்பினை (candidature) திரும்பப் பெறலாம். ஒருமுறை திரும்பப்பெறுவதற்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டுவிட்டால் அதுவே இறுதியானதாகும். (final)

(விதி 52 (8) (h) )

### 3.4.4. வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்

(1) தேர்தல் அலுவலர், படிவம் 20ல், இறுதியாக சரியானதென ஒப்புக் கொள்ளப்பட்டு, ஆனால் திரும்பப் பெறப்படாத வேட்புமனுக்களில் கண்ட வேட்பாளர்களின் பட்டியலைத் தயாரித்து, அறிவிப்பில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சங்க அலுவலக அறிவிப்புப் பலகையிலோ அல்லது அவரால் குறிப்பிடப்படும் வேறு ஒரு இடத்திலோ வெளியிடவேண்டும்.

(விதி 52 (8) (i) )

(2) ஒரு தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டிய எண்ணிக்கைக்கு அதிகமாக, சரியானதென்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, திரும்பப்பெறப்படாத வேட்பு மனுக்கள் இல்லாத நிலையில், அந்த வேட்பாளர்கள் அனைவரும் அத்தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு அவர்கள் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட–வர்களாக தேர்தல் அலுவலரால் அறிவிக்கப்படவேண்டும். உடன் அவர்களது பெயர்ப்பட்டியல் சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகை அல்லது தேர்தல் அலுவலரால் குறிப்பிடப்படும் இடத்தில் முறையாக வெளியிடப்படுவதுடன் இந்த விவரத்தை தேர்தல் அலுவலர் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையத்திற்கும் அறிக்கை செய்திடவேண்டும். (விதி 52 (9) (a) )

(3) தேர்ந்தெடுக்கப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையைவிட, போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பின், அவர்களது பெயர்களின் ஆங்கில மொழி அகரவரிசைப்படி, அவர்களுக்கு வரிசை எண் ஒதுக்கீடு செய்து அதற்கென நிர்ணயிக்கப்பட்ட நாளில் வாக்கெடுப்பு நடத்த தேர்தல் அலுவலர் ஏற்பாடு செய்தல் வேண்டும்

(விதி 52 (9) (b) )

(4) எந்த ஒரு தொகுதிக்கும் போட்டியிடும் வேட்பாளர் எவரும் இல்லையென்றால், தேர்தல் அலுவலர், உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு அறிக்கை அனுப்பவேண்டும். இம்மாதிரியான நேர்வுகளில் அந்த இடத்தையோ, அல்லது இடங்களையோ நிரப்புவதற்கு தேர்தல் ஆணையம் மீண்டும் தேர்தல் நடத்துவதற்கான அனைத்து வகை நடவடிக்கைகளையும் புதிதாக மேற்கொள்ளலாம்.

(விதி 52 (9) (c) )

(5) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை நிரப்புவதற்கு, தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுள்ள போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, ஒதுக்கீடு இடங்களின் எண்ணிக்கையினை

விட அதிகமாக இல்லாதிருந்தால் (not larger), அவ்வாறு போட்டியிடும் வேட்பாளர் அல்லது வேட்பாளர்களை முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக தேர்தல் அலுவலர் அறிவிப்புச் செய்வதுடன் அவர்களது பெயர்களையும் முறையாக வெளியிடவேண்டும். அதனை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையர் ஆகியோருக்கு அறிக்கை (report) அனுப்பவேண்டும். (விதி 52 (9) (d) )

(6) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை நிரப்புவதற்கு, தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுள்ள போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, ஒதுக்கீடு இடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்து, அதே நேரத்தில், அத்தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டிய மொத்த இடங்களின் எண்ணிக்கைக்கு குறைவாகவோ அல்லது சமமாகவோ இருந்தால், சம்பந்தப்பட்ட வேட்பாளர்களுக்கு ஓர் அறிவிப்புச் செய்தபின் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத் தகுதியாக உள்ள வேட்பாளர்களில் குலுக்கல் முறையில் (by lots), எவரெவர் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர், எவரெவர் ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர், என்பதைத் தீர்மானிக்க (decide) வேண்டும். அதன் பின்னர் படிவம் 20ல் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை, சங்க அலுவலக அறிவிப்புப் பலகையில் ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதன் பின்னர் இப்போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அறிவிக்க (Declare) வேண்டும். அதனை உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு அறிக்கை (report) அனுப்பவேண்டும்.

(விதி 52 (9) (e) )

(7) தேர்தலில் நிரப்பப்படவேண்டிய ஒதுக்கப்பட்ட இடங்கள் மேற்கூறப்பட்ட (விதி 52(9) (d) மற்றும் (e)) ன்படி, நிரப்பப்பட்டிருப்பின், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட

வேட்பாளர்களை தவிர்த்து, எஞ்சியிருக்கும் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்தல் மூலம் நிரப்பப்படவேண்டிய, ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களைக் (Non reserved) காட்டிலும் அதிகம் இல்லாதிருந்தால் (not larger), படிவம்-20ல், போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை சங்க அலுவலகத்திலுள்ள அறிவிப்புப் பலகையில் ஒட்டி, அதன் பின்னர் அவர்களை ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களுக்கு (non reserved seat) முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்க (declare) வேண்டும். அதனை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு அறிக்கை அனுப்பவேண்டும்.

(விதி 52 (9) (f) )

(8) மேற்காணும் இனங்களில் (விதி 52 (9) (a) (d) (e) மற்றும் f), குறிப்பிட்ட நடைமுறைகளைப் பின்பற்றிய பின்னர், நிரப்பப்படவேண்டிய இடங்கள் இருக்குமென்றால், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையர் ஆகியோருக்கு தேர்தல் அலுவலர் அறிக்கை அனுப்ப வேண்டும். இம்மாதிரி நேர்வுகளில் அந்த இடம் அல்லது இடங்களை நிரப்புவதற்கு தேர்தல் ஆணையம் புதிதாக தேர்தல் நடத்துவது போன்று மீண்டும் அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து வகையிலும் ஆரம்பித்தல்வேண்டும்.

(விதி 52 (9) (g) )

## 3.5. வாக்குப்பதிவு:-

3.5.1. மேலே சொல்லப்பட்டபடி (விதி 52 (9) (d),(e) மற்றும் (f)) நிரப்பப்படாத இடங்கள் இருப்பினும் அல்லது போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்படவேண்டிய இடங்களை விட அதிகமாக இருப்பினும், அவற்றில் சொல்லப்பட்டபடி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து மீதம் உள்ள இடங்களுக்கான வாக்குப்பதிவு நடத்திடவேண்டும்.

(விதி 52 (9) (h) )

3.5.2. வாக்குப்பதிவு நடைபெறவுள்ள ஒவ்வொரு தேர்தலிலும், ஒவ்வொரு தேர்தல் அலுவலருக்கும், போதுமான அளவு வாக்குப் பெட்டிகள், வாக்குச்சீட்டுகள், வாக்குப்பதிவு தொடர்புடைய வாக்காளர் பட்டியல்களின் நகல்கள், வாக்குச்சீட்டில் குறியீடு முத்திரை (distinguishing mark) செய்வதற்கான பொருட்கள் உட்பட வாக்குப்பதிவு நடத்தத் தேவைப்படும் இதர பொருட்கள் அனைத்தையும் சங்கம் வழங்க வேண்டும்.

(விதி52 (10) (a) )

3.5.3. வாக்குச் சீட்டுகளை உள்ளே செலுத்திடும் (introduce) வகையிலும், வாக்குப்பெட்டியினைத் திறந்தாலன்றி அவற்றை எடுக்க முடியாதபடியான அமைப்புடனும் கூடிய வாக்குப் பெட்டிகளை ஏற்பாடு செய்திடல் வேண்டும். வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வாக்குப் பெட்டியின் உள்புறமும் முகப்புச்சீட்டுகள் மற்றும் முகவரிச் சீட்டுகள் (labels and address tags) கீழ்வரும் விபரங்களுடன் இருத்தல் வேண்டும்.

(1) i) சங்கத்தின் பெயர் :
ii) தொகுதி இருப்பின் தொகுதியின் பெயர் :

(2) வாக்குச்சாவடியின் பெயர் :

(3) வாக்குப்பெட்டியின் வரிசை எண் :
(வாக்குப்பதிவு முடிவுற்றபின்,
வாக்குப்பெட்டியின் வெளியே உள்ள சீட்டு
மற்றும் முகவரி அட்டையில் மட்டும்)

(4) வாக்குப் பதிவு நாள் :

(விதி 52 (10) (b) )

3.5.4. போட்டியிடும் வேட்பாளர் வாக்குப்பதிவு நடைபெறும் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் ஓர் தேர்தல் முகவரை (election agent) தனது பிரதிநிதியாக நியமனம் செய்யலாம். இவ்வாறு நியமனம் செய்வதை தேர்தல் அலுவலருக்கு நியமனக் கடிதத்தை நேரில் கொடுத்தோ அல்லது அனுப்பியோ, தெரியப்படுத்த வேண்டும். இந்த நியமனக்கடிதம் படிவம் 21ல் இருத்தல் வேண்டும்.

(விதி 52 (10) (c))

**3.5.5.** வாக்குப்பதிவு ஆரம்பிப்பதற்கு முன்னர் (immediately before) காலியாக உள்ள (empty) வாக்குப்பெட்டியினை அப்போது அங்கிருக்கும் வேட்பாளர்கள் அல்லது அவர்களின் தேர்தல் முகவர்களிடம் காண்பித்து, பின்னர் முத்திரையை உடைக்காது பெட்டியைத் திறக்க இயலாது என்ற முறையில் தேர்தல் அலுவலர் தனது முத்திரையினை இட்டு அதனை மூடவேண்டும். வேட்பாளரோ அல்லது அவரது முகவரோ விருப்பப்படின் அவரது முத்திரையினைப் பதிக்கலாம்.

(விதி 52 (10) (d) )

**3.5.6.** ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் வாக்குப்பதிவு நடைபெறும் இடத்திலும் (Polling Station and Polling Booths), வேட்பாளர்களின் பெயர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண்களும் நன்கு தெரியும்படியாக (prominently) தெரியப்படுத்த (display) வேண்டும். தவிரவும் அவற்றில் வாக்காளர்கள் தாங்கள் பதிவு செய்யும் வாக்கு பிறரால் பார்வையிட இயலாத வகையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட, தனித்தனியான தடுப்பறைகளும் (compartments) இருத்தல் வேண்டும்.

(விதி 52 (10) (e) )

**3.5.7** ஒவ்வொரு வாக்குச் சீட்டிலும், போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண்கள், அவர்கள் போட்டியிடும் ஒதுக்கப்பட்ட / ஒதுக்கப்படாத இடம் பற்றிய விபரங்கள், வாக்களரால் ‘X’ அல்லது ‘+’ என்ற முத்திரையினை இடுவதற்கு போதுமான அளவு இடைவெளியுடன், இருத்தல் வேண்டும். வாக்குச் சீட்டின் மேல் பகுதியில், தேர்தல் நடைபெறும் சங்கம் மற்றும் தொகுதி இருப்பின் தொகுதி ஆகியவற்றின் பெயர், முகவரி மற்றும் வாக்குச் சீட்டின் பின்புறத்தில் தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் இருத்தல் வேண்டும். வாக்குச் சீட்டின் முன்புறம் அல்லது பின்புறம் மேல் பகுதியில் அச்சீட்டின் வரிசை எண் இருத்தல் வேண்டும்.

(விதி 52 (10) (f))

**3.5.8** வாக்குச் சாவடியில் வாக்காளர்களை அடையாளம் (identify) காண்பதற்கு உதவியாக, தேர்தல் அலுவலர் அவரது தேவைக்கு ஏற்றபடி, சங்க அலுவலர்களையோ (officers) அல்லது பணியாளர்களையோ (employees of the society) நியமித்துக் கொள்ளலாம். வாக்காளர்களின் அடையாளத்தை உறுதி செய்வதிலும் (ensure identification) ஆள்மாறாட்டத்தைத் (impersonation) தடுப்பதிலும் தேர்தல் அலுவலரால் தேவை என்று கருதும் அனைத்து ஏற்பாடுகளையும் அவர் செய்து கொள்ளலாம். (விதி 52 (11) (a))

**3.5.9** தேர்தல் அலுவலர், ஒரு நேரத்தில் (at any one time) வாக்குச் சாவடிக்குள் அனுமதிக்கக் கூடிய வாக்களர்களின் எண்ணிக்கையினை ஒழுங்குபடுத்தலாம். ஆனால் அடியில் வரும் நபர்கள் அதிலிருந்து விலக்கப்பட்டிருத்தல் (exclude) வேண்டும்.

(1) தேர்தலை நடத்துவதற்கு தனக்கு உதவி செய்ய தேர்தல் அலுவலரால் நியமனம் செய்யப்பட்டவர்கள்

(2) ஒவ்வொரு வேட்பாளரும், ஒவ்வொரு வேட்பாளரின் தேர்தல் முகவரும்

(3) கைக்குழந்தையுடன் வரும் வாக்காளர்கள்

(4) உதவியின்றி நடமாட இயலாத பார்வையற்ற அல்லது நலிந்த (infirm) வாக்களர்களுடன் (accompanying) வரும் நபர்

(5) வாக்காளர்களை அடையாளம் காட்டுவதற்கு உதவியாக நியமிக்கப்பட்ட சங்க அலுவலர்கள் அல்லது பணியாளர்கள்.

**3.5.10.** தவிரவும் ஆண் மற்றும் பெண் வாக்காளர்கள் உள்ள வாக்குச் சாவடியில் அவர்கள் தனித்தனி வரிசையாக வாக்குச் சாவடிக்குள் அனுமதிக்க அறிவுறுத்தலாம். (விதி 52 (11) (b)

**3.5.11** வாக்குச் சாவடிக்குள் எந்த வகையிலும் வேட்பாளர் மற்றும் அவரது தேர்தல் முகவர் உள்ளிட்ட எந்த ஒரு நபரும் வாக்கு சேகரித்தல் (canvassing of vote) கூடாது.

(விதி 52 (11) (c))

**3.5.12** வாக்கெடுப்பு உள்ள ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும், வாக்குச் சீட்டு மூலம் வாக்களிக்க வேண்டும். வாக்களிக்கும் அனைத்து வாக்காளர்களும் வாக்குச் சாவடியில்

நேரில் (in person) வாக்களிக்க வேண்டும். மாற்றாள் (proxy) மூலம் வாக்கு அளித்தல் கூடாது.

(விதி 52 (11) (cc))

**3.5.13** வாக்குச் சாவடிக்குள் வாக்காளர் வந்தவுடன் தேர்தல் அலுவலர் அல்லது வாக்குப்பதிவு அலுவலர் (Polling Officer) அவருக்கு ஓர் வாக்குச் சீட்டினை வழங்க வேண்டும். இந்த வாக்காளரும் வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்ட நபரும் ஒருவரே என தேர்தல் அலுவலரோ, வாக்குப்பதிவு அலுவலரோ கருத இயலாவிடில் (satisfy) வாக்குச் சீட்டு வழங்கக் கூடாது.

(விதி 52 (11) (d))

**3.5.14** ஒரு வாக்காளர் வாக்குச் சீட்டு பெறும் உரிமை குறித்து, தேர்தல் அலுவலரோ, வாக்குப்பதிவு அலுவலரோ தீர்மானிக்கும்போது, வாக்காளர் பட்டியலில் காணப்படும் வாக்காளர் தொடர்பான விபரம் இவருக்குரியதுதான் எனக் கருதினால் (satisfy) அப்பட்டியலில் காணப்படும் சிறு தவறுகளை (errors) புறக்கணிக்க வேண்டும்.

(விதி 52 (11) (e))

**3.5.15** வேட்பாளரோ அல்லது அவரது தேர்தல் முகவரோ, ஒரு வாக்காளர் வாக்களிப்பது குறித்து மறுப்புகள் ஏதேனும் தெரிவிக்கும்போது, அது குறித்து ஓர் சுருக்க விசாரணை (summary enquiry) மேற்கொண்டு எழுத்து பூர்வமான முடிவெடுத்தல் வேண்டும் (decide in writing).

(விதி 52 (11) (f))

**3.5.16** ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒரு வாக்குச் சீட்டு மட்டுமே வழங்கப்பட வேண்டும். வாக்குச் சீட்டினைப் பெற்ற உடன், வாக்காளர் வாக்களிக்கும் தடுப்பறை (compartment)க்குச் சென்று, வாக்குச் சீட்டில் தான் வாக்களிக்க விரும்பும் வேட்பாளர் அல்லது வேட்பாளர்களின் பெயர் அல்லது பெயர்களின் எதிரே மிகக் கவனமாக

முத்திரையிட்டு (mark) பிறர் அறியாவண்ணம் அதனை மடித்து, மறைத்து வாக்குப் பெட்டிக்குள் இட (put) வேண்டும். ஓர் வாக்காளர் தடுப்பறைக்குள் இருந்தால், மற்றொரு வாக்காளர் அதற்குள் செல்லக் கூடாது. (விதி 52 (11 (g))

**3.5.17** பார்வையின்மை அல்லது இயலாமை அல்லது எழுத்தறிவு இன்மை (blindness, physical infirmity or illiteracy) போன்றவற்றினால், ஒரு வாக்காளர் வாக்குச் சீட்டில் முத்திரையிட (mark) இயலாத நிலையில், தேர்தல் அலுவலரோ, வாக்குச் சாவடி அலுவலரோ, அந்த வாக்காளரிடம் அவர் வாக்களிக்க விரும்பும் வேட்பாளர் / வேட்பாளர்கள் பற்றி கேட்டறிந்து (ascertain), அவர் சார்பாக வாக்குச் சீட்டில் முத்திரையிட்டு அதனை வாக்குப் பெட்டியில் இடலாம். (விதி 52 (11) (h))

**3.5.18** ஒவ்வொரு வாக்காளரும், தொடர்புடைய தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய காலி இடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, வாக்குகள் அளிக்க உரிமை பெற்றவராவார். ஒரு வேட்பாளருக்கு ஒரு வாக்குக்கு மேல் வாக்களித்தல் கூடாது

(விதி 52 (12))

**3.5.19** அறிவிக்கப்பட்டபடி வாக்குப்பதிவு முடிவுறும் நேரத்தில் (hour fixed for the closure of polling), வாக்குச் சாவடியை தேர்தல் அலுவலர் அடைத்திடல் (close) வேண்டும். அதன் பின்னர் வாக்காளர் எவரையும் வாக்குச் சாவடிக்குள் அனுமதித்தல் கூடாது. அடைப்பதற்கு முன்பாக வாக்குச் சாவடிக்குள் இருக்கும் (present) வாக்காளர்கள் அனைவரையும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும். (விதி 52 (13) (a))

**3.5.20** ஓர் வாக்காளர் வாக்குச் சாவடி அடைக்கும் முன்னர் அங்கு இருந்தாரா என கேள்வி எழும் நிலையில், தேர்தல் அலுவலரோ அல்லது வாக்குப்பதிவு அலுவலரோ அது குறித்து முடிவெடுக்கலாம். அவரது முடிவே இறுதியானது. (Final) (விதி 52 (13 (b))

**3.5.21** வாக்களிப்பு முடிவுற்றவுடன் தேர்தல் அலுவலர் அல்லது வாக்குச் சாவடி அலுவலர் வாக்குப் பெட்டியின் திறப்பினை (slit) நன்கு மூடி (close), முத்திரையிட வேண்டும்.

அப்போது அங்கிருக்கும் வேட்பாளர் அல்லது அவரது தேர்தல் முகவர் விருப்பப்படின் அவருடைய முத்திரையினை இடவும் அனுமதிக்க வேண்டும்.

(விதி 52 (13) (c))

## 3.6 வாக்கு எண்ணிக்கை (Counting):

**3.6.1.** அதற்கென அறிவிக்கப்பட்ட நாள், நேரம் மற்றும் இடத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுதல் வேண்டும்.

(விதி 52 (14) (a))

**3.6.2.** ஒவ்வொரு வேட்பாளர், அவரது ஒரு தேர்தல் முகவர், அவருக்கென தேர்தல் அலுவலரால் நிர்ணயிக்கப்படும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் (counting agents) ஆகியோர் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் போது உடனிருக்க உரிமை பெற்றவராவார். தேர்தல் தொடர்பாக ஏற்கனவே பணியில் இருப்போர் மற்றும் வாக்கு எண்ணிக்கைக்கு உதவிட தேர்தல் அலுவலரால் நியமனம் செய்யப்பட்டவர் தவிர வேறு எந்த ஒரு நபரும் வாக்கு எண்ணிக்கையின்போது இருக்க அனுமதிக்கக் கூடாது.

(விதி 52 (14) (b))

**3.6.3.** தேர்தல் அலுவலர் வாக்குப் பெட்டியை வேட்பாளர்கள், அவர்களது தேர்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் முன்பாக திறக்க வேண்டும். தேர்தல் அலுவராலோ அல்லது அவரது மேற்பார்வையிலோ வாக்குகள் எண்ணப்பட வேண்டும்.

(விதி 52 (14) (c))

**3.6.4.** வாக்குச்சீட்டு கீழ்வரும் இனங்களில் நிராகரிக்கப்பட வேண்டும். (Reject).

**(1)** வாக்காளர் அடையாளம் தெரியும் வகையில் ஏதாவது குறியீடு அல்லது எழுத்து இருந்தால் ;

**(2)** அதில் வாக்கு ஏதும் பதிவு செய்யப்படாமலிருந்தால் ;

(3) தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையை விட அதிக வேட்பாளர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தால் ;

(4) தேர்தல் அலுவலராலோ, வாக்குச் சாவடி அலுவலராலோ வழங்கப்படாத வேறு ஒரு வாக்குச்சீட்டாக இருந்தால் ;

(5) எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது என்று சந்தேகம் தரும் முறையில் முத்திரையிடப்பட்டிருந்தால் ;

(6) தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் இல்லாதிருந்தால் ;

(7) உண்மையான (genuine) வாக்குச் சீட்டுதானா என்று அறிய முடியாத அளவிற்கு சிதைந்தோ, சேதமடைந்தோ இருந்தால் ;

(8) தொடர்புடைய (relevant) வாக்குச் சீட்டாக இல்லாதிருந்தால்.

**3.6.5** மேலே இனம் (7)ல் சொல்லப்பட்ட குறையானது தேர்தல் அலுவலர் அல்லது வாக்குச் சாவடி அலுவலர் ஆகியோரின் தவறுதலினாலோ (mistake) அல்லது விடுதலினாலோ (failure) ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் அலுவலர் கருதும் நிலையில் (satisfy) அக்காரணத்திற்காக மட்டும் அந்த வாக்குச் சீட்டினை நிராகரித்தல் கூடாது.

**3.6.6** வாக்குச் சீட்டில், குறிப்பிட்ட வேட்பாளருக்குத்தான் வாக்காளர் வாக்களிக்க விருப்பப்பட்டுள்ளார் என்பது தெளிவாக அறியக்கூடிய நிலையில், அவரது முத்திரை (mark) தெளிவாக இல்லை மற்றும் ஒரு தடவைக்கு மேல் முத்திரை இடப்பட்டுள்ளது என்ற காரணங்களினால் மட்டும் அந்த வாக்குச் சீட்டினை நிராகரித்தல் கூடாது.

(விதி 52 (15) (a))

**3.6.7** தேர்தல் அலுவலர் மட்டுமே வாக்குச் சீட்டினை நிராகரிக்கும் அதிகாரம் பெற்றவராவார். (விதி 52 (15) (b))

**3.6.8** வாக்குச் சாவடியில் பயன்படுத்தப்பட்ட, வாக்குப் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட, வாக்குச் சீட்டுகளில், விதியின் கீழ் நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகள் (rejected) தனிக் கட்டாக (bundle) வைக்கப்பட வேண்டும்.

(விதி 52 (15) (c)).

**3.6.9** நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் தவிர்த்த மற்ற வாக்குச் சீட்டுகளில் பதிவாகி உள்ள அனைத்து வாக்குகளையும் எண்ண வேண்டும். தேர்தல் அலுவலர் கூடுமானவரை வாக்கு எண்ணிக்கையினை தொடர்ச்சியாக (continuous) மேற்கொள்ள வேண்டும். வாக்கு எண்ணிக்கை நிறுத்தப்பட வேண்டி இருக்கும் தருணத்தில் (suspended) ஏற்படும் இடைவெளியில், வாக்குச் சீட்டுகள், கட்டுகள் (pockets) மற்றும் தேர்தல் தொடர்பான அனைத்து ஆவணங்கள் (papers) ஆகியவற்றை, தேர்தல் அலுவலர், விருப்பப்படும் வேட்பாளர்கள் அல்லது அவர்கள் தேர்தல் முகவர்கள் ஆகியோரது முத்திரையுடன் தனது முத்திரையினையும் இட்டு, போதுமான பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும்.

3.7. **முடிவு அறிவித்தல்**

**3.7.1.** வாக்கு எண்ணிக்கை முடிவுற்ற உடன், ஒவ்வொரு வாக்காளரும் பெற்றுள்ள செல்லத்தக்க (valid) வாக்குகளை தெரிவித்து (announce), செல்லத்தக்க வாக்குகளை அதிக எண்ணிக்கையில் (largest number) பெற்றுள்ள வேட்பாளரைத் தேர்வு பெற்றவராக அறிவிக்க (declare as elected) வேண்டும். சம எண்ணிக்கையில் வாக்குகள் உள்ள நேர்வில், தேர்தல் அலுவலர் குலுக்கல் முறையில் (casting lots) தேர்தல் முடிவினை தீர்மானிக்க (decide) வேண்டும்.

(விதி 52 (16)

**3.7.2.** தேர்தல் அலுவலர், இதற்கென தனியான ஓர் பதிவேட்டில் தேர்தல் முடிவுகளை பதிவு செய்து கையொப்பமிடல் வேண்டும்.

(விதி 52 (17) (a)

**3.7.3.** முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் சங்க அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் அல்லது தேர்தல் அலுவலரால் தெரிவிக்கப்படும் (specify) இடத்தில் வெளியிடப்பட வேண்டும்.

(விதி 52 (17) (b))

**3.7.4.** தேர்தல் முடிவு பெற்ற உடன், தேர்தல் அலுவலர், படிவம் 22–ல், தேர்தல் முடிவுகளை, சங்கத்திற்கும், தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் அலுவலர், மாவட்ட தேர்தல் அலுவலர், மற்றும் விதி 53(1)–ன் கீழ் தேர்தல் அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தால் அத்தேர்தல் அலுவலர் ஆகியோருக்கும் அனுப்ப வேண்டும். (விதி 52 (17) (c)

**3.8. தேர்தல் நிறுத்தப்படுதல்**

**3.8.1** தேர்தலின்போது ஏதேனும் ஒரு கட்டத்தில் (stage), கலகம் (riot) மற்றும் வன்முறை (open violence)–கள் மூலம் தேர்தல் நடவடிக்கைகளுக்கு குறுக்கீடுகள் மற்றும் தடைகள் (interrupted or obstructed) ஏற்படும் நிலையிலோ அல்லது ஏதேனும் இயற்கை பேரிடரால் (natural calamity) தேர்தலை மேற்கொண்டு நடத்த இயலாத நிலையிலோ, தேர்தல் அலுவலர், அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, தேர்தலை நிறுத்துவதற்கு அதிகாரம் பெற்றவராவார். (விதி 52 (18) (a))

**3.8.2.** அவ்வாறு தேர்தல் நிறுத்தப்பட்டால், அதன் விவரத்தை தேர்தல் அலுவலர் உடனே அறிவிப்பதுடன் (announce) மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு உடனடியாகத் தெரிவிக்க (report) வேண்டும்.

(விதி 52 (18) (b))

**3.8.3** அவ்வாறு நிறுத்தப்பட்ட தேர்தல் நடவடிக்கைகளை, எந்த நிலையில் (stage) நிறுத்தப்பட்டதோ அந்த நிலையிலோ, அல்லது அதற்கு முந்தைய நிலையிலோ, (an earlier

stage), தேர்தல் ஆணையம் தீர்மானித்தபடி (decide) தொடர்ந்து நடத்தப்பட (resume) வேண்டும். (விதி 52 (18) (c))

**3.8.4.** மேலே கண்ட இனங்களில் (விதி 52(18) (a) முதல் (c) வரை) என்ன சொல்லப்பட்டிருந்தாலும், சிறப்பு காரணங்களுக்கு (special reasons), ஏற்கெனவே விதிகளின் கீழ் அறிவிக்கப்பட்டிருந்த (notified) நாட்கள் மற்றும் கால அளவினை, புதிதாக நிர்ணயிக்க, மாவட்ட தேர்தல் அலுவலருக்கு தேர்தல் ஆணையம் அதிகாரமளிக்கலாம். (Empower) (விதி 52(18) (d))

**3.8.5.** மேற்கூறப்பட்ட தேர்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் சங்க நிர்வாகக்குழுவும் மற்றும் சங்கத்தின் ஒவ்வொரு அலுவலரும், தேர்தல் அலுவலருக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பை வழங்குவதுடன் அது தொடர்பாக அவருக்குத் தேவைப்படும் அனைத்து ஆவணங்களையும் அளித்திட வேண்டும்

(விதி 52 (19) )

## 3.9. தேர்தலுக்கான இடங்கள்

**3.9.1.** சங்க அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் (premises) அல்லது, சங்கத்தின் தலைமையகத்தில் (head quarters) அனைத்து வாக்காளர்களும் வரக்கூடிய (access) ஒரு பொது இடத்தில் (public place) தேர்தல் நடத்தப்படவேண்டும்.

(விதி 52 (21) (a) )

**3.9.2.** சங்கத்தின் தலைமையகத்திற்கு வெளியே அமைந்துள்ள ஏதேனும் ஒரு தொகுதியிலிருந்து(constitutency) நிர்வாகக்குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருந்தால், அத்தொகுதியிலுள்ள அனைத்து வாக்காளர்களும் வரக்கூடிய ஒரு பொது இடத்தில் அதற்கான தேர்தல் நடத்தப்படலாம்.

**3.9.3** தேர்தல் ஆணையம் அல்லது தேர்தல் அலுவலர், தேவையென்று கருதினால் சங்கத்தின் செயல் எல்லைக்குள் (area of operation) அமைந்துள்ள அனைத்து வாக்காளர்களும் வரக்கூடிய வெவ்வேறு பொது இடங்களில் வாக்குப்பதிவு நடைபெறலாம்.

**3.9.4** வெவ்வேறு பொது இடங்களில் வாக்குப்பதிவு நடைபெறும் நேர்வில், அந்தந்த வாக்குப்பதிவு இடங்களுக்கு ஒதுக்கப்பட்ட உறுப்பினர்களின் விவரத்தை தேர்தல் அறிவிப்பில் (election notice) குறிப்பிடவேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள், குறிப்பிடப்பட்ட வாக்குச் சாவடியில் மட்டுமே வாக்களிக்க வேண்டும்.

**3.9.5** தேர்தல் ஆணையம் கருதினால், தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை பொறுத்தவரையில், வேட்பு மனுக்கள் தாக்கல், பரிசீலனை, திரும்பப்பெறுதல், தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் அல்லது வாக்கு எண்ணிக்கை, தேர்தல் முடிவு அறிவித்தல் போன்றவை அச்சங்கத்தின் செயல் எல்லையில் உள்ள அனைத்து வாக்காளர்களும் வரக்கூடிய எந்த ஒரு பொது இடத்திலோ அல்லது சங்கத்தின் தலைமையகம் அமைந்துள்ள வருவாய் வட்டத்திலுள்ள (revenue taluk) எந்த ஒரு பொது இடத்திலோ நடத்தப்படலாம். (விதி எண் 52 (21(a) )

**3.9.6.** அறிவிக்கப்பட்ட ஒரு வாக்குச்சாவடி (notified polling station), ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் அல்லது பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் அல்லது பொது இடங்கள், (unreserved) ஆகியவற்றிற்கான தேர்தல்களை தனித்தனியாகவோ (individually) அல்லது சேர்ந்தோ (simultaneously) நடத்துவதற்கு பயன்படுத்தப்படலாம்; அத்தகைய நேர்வில் ஒரு தேர்தலை நடத்துவதற்கு நியமனம் செய்யப்பட்ட தேர்தல் அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் தேர்தல் தொடர்பாக நியமிக்கப்பட்ட இதர அலுவலர்கள் அனைவரும், அதே

வாக்குச்சாவடியில் சேர்ந்து நடைபெறும் மற்ற தேர்தல்களை நடத்துவதற்கும் (all other elections held simultaneously) நியமனம் செய்யப்பட்டவர்களாகவே கருதப்படுவர். வேறு வகையாக தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டாலன்றி, இவ்வாறான நேர்வுகளில் ஒரு தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பெட்டிகள், இரப்பர் முத்திரைகள் அடையாளக்குறிகள் போன்ற வாக்குப்பதிவிற்கான அனைத்து பொருட்கள் மற்றும் வாக்காளர் பட்டியல், மேலுறைகள் (covers) போன்றவைகள் மற்ற தேர்தல்களிலும் பயன்படுத்தலாம்.

(விதி 52(21) (b) )

## 3.10. தேர்தல் ஆவணங்கள்

**3.10.1.** தேர்தல் தொடர்பான அனைத்து ஆவணங்களும் ஒரு பெட்டகத்தில் (container) பாதுகாப்பாக வைக்கப்பட்டு, தேர்தல் அலுவலர் மற்றும் முத்திரையிட விரும்பும் வேட்பாளர்கள் அல்லது அவர்களது தேர்தல் முகவர் ஆகியோரால் முத்திரையிடப்படல் வேண்டும்.

(விதி 52 (22) (a) )

**3.10.2.** தேர்தல் முடிந்தவுடன், தேர்தல் அலுவலர், தேர்தல் தொடர்பான ஆவணங்களை, மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது அவரால் இதற்கென அதிகாரம் அளிக்கப்பட்ட எந்த ஒரு நபரிடமோ, அவரது ஒப்புகை பெற்று ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட தேர்தல் ஆவணங்கள் தேர்தல் தொடர்பாக எவ்வித தேர்தல் தாவாவும் (election dispute) இல்லாத நிலையில் தேர்தல் நாளிலிருந்து ஓராண்டு காலம் அல்லது இத்தேர்தல் தொடர்பாக ஒரு தேர்தல் தாவா பதிவாளருக்கு (Registrar) அனுப்பப்பட்டிருப்பின் (refer) அத்தாவா மீது இறுதி முடிவு எடுக்கப்படும் நாள், ஆகியவற்றில் எது பிந்தியுள்ளதோ (later) அது வரையிலும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

(விதி 52 (22) (b) )

**3.10.3.** இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஆவணங்கள் தேர்தல் தொடர்பாக எவ்வித தேர்தல் தாவாவும் பதிவாளருக்கு அனுப்பப்படாத நிலையில் தேர்தல்நாளிலிருந்து ஓராண்டுகாலத்திற்கு பின்னர் அல்லது தாவா இருப்பின் தாவா இறுதியாக முடிவு கட்டிய பின்னர் ஆகியவற்றில் எது பிந்தியுள்ளதோ, அப்போது அழிக்கப்படல் வேண்டும்.

(விதி 52 (22) ( c ) )

## 4. தேர்தல் ஆணையம் தேர்தலை நிறுத்தும் நேர்வுகள்

**4.1.** தேர்தல் தொடர்பான விதிகளில் என்ன கூறப்பட்டிருந்தபோதிலும், தேர்தல் ஆணையம் தாமாகவோ, அல்லது ஒரு புகார் அல்லது சட்டஒழுங்கு சிக்கல் அல்லது கலகம் அல்லது வன்முறை அல்லது வகுப்புவாரி மோதல் அல்லது இயற்கைப்பேரிடர் அல்லது முடக்கம் போன்றவற்றாலோ அல்லது போதுமான இதர காரணங்களினாலோ (law and order problem or riot or open violence or communal clash or natural calamity or bundh or other sufficient cause), சுதந்திரமான, முறையான (free and fair) தேர்தலை நடத்துவதற்கான சாத்தியமில்லை என மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது தேர்தல் பார்வையாளர் அனுப்பும் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலோ, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை அதற்கான காரணங்களை பதிவு செய்து, ரத்து செய்ய தேர்தல் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது. இம்மாதிரி நிகழ்வுகளில் அந்த இடங்களை நிரப்புவதற்கு புதிய தேர்தல் நடத்துவது போன்று, அனைத்து வகைகளிலும் புதிதாகத் தேர்தல் நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் தொடங்கலாம். (விதி 52 (23) )

## 5.தொடக்க கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுத் தேர்தல்- (சட்டம் பிரிவு 33)

**5.1.** தொடக்க கூட்டுறவுச் சங்கங்களில் அட்டவணைப்படுத்தப்பட்ட (Scheduled) சங்கங்களைத் தவிர பிற சங்கங்களின் நிர்வாகக் குழு அவற்றின் துணை விதிகளில்

குறிப்பிட்டுள்ளபடி அமையும். துணை விதிகளில் குறிப்பிடப்பட்டவை, கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளில் கண்டுள்ளவற்றிற்கு மாறாகவோ (contrary) அல்லது அவற்றின் அடிப்படையில் உரிய திருத்தங்கள் (amendments) மேற்கொள்ளப்படாமலோ இருக்கும் நிலையில், கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளில் கண்டுள்ளவாறே நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்.

**5.2.** துணை விதிகளில் என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும் சட்டப்பிரிவு **33(3)** (b)ன்படி ஒரு தொடக்க கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் குறைந்த அளவு எண்ணிக்கை **7**, உச்ச அளவு எண்ணிக்கை **21** ஆகும்.

**5.3.** துணைவிதிகளில் ஒரு தொடக்கச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை **7**க்கு குறையாமலும் **21**க்கு அதிகப்படாமலும் இருப்பின் துணைவிதிகளில் குறிப்பிட்டுள்ள அதே எண்ணிக்கைக்குத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

**5.4.** நிர்வாகக் குழு உறுப்பினர் எண்ணிக்கை **21** அல்லது அதற்கு அதிகமாக துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொடக்கச் சங்கங்களின் நிர்வாகக் குழுவிற்குத் தேர்தல் நடத்தும் பொழுது **21** உறுப்பினர்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெற வேண்டும்

**5.5.** தொடக்கக் கூட்டுறவுச் சங்கத் துணை விதிகளில் பகுதி அடிப்படையில் அல்லாமல் வேறு விதமாகத் தொகுதிகள் பிரிக்கப்பட்டிருந்தால் தொகுதியின் அடிப்படையில் தேர்தல் நடைபெறும். எடுத்துக்காட்டாக ஒரு பணியாளர் சங்கத்தின் இன்ன இன்ன பிரிவினர்களுக்கு இத்தனை இத்தனை இடம் என்று துணை விதிகளில் ஒதுக்கப்பட்டிருந்தால் அதன்படி தேர்தல் நடைபெறவேண்டும். இந்த நேர்வுகளில் அந்தந்தத் தொகுதியைச் சார்ந்த வாக்காளர் மட்டுமே அந்தத் தொகுதியிலிருந்து நிற்பவருக்கு வாக்களிக்க வேண்டும்.

**5.6.** அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள (Scheduled) தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றின் துணை விதிகளில் என்ன சொல்லியிருந்தாலும், விதிகளின் **2**வது

அட்டவணையில் (Schedule-II) குறிப்பிட்டுள்ளபடி அந்தந்த தொகுதிக்கு தொடர்புடைய வாக்காளர்களே வாக்களித்து நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

**5.7.ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு நிர்வாகக்குழுவில் இடம்:**

5.7.1. ஒவ்வொரு வகை சங்கத்தின் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய நிர்வாகக்குழு உறுப்பினர்களில், 18 விழுக்காடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும், 30 விழுக்காடு பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினும் இவ்வகை ஒதுக்கீடானது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினைச் சார்ந்தோர் நிர்வாகக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்படாத பொது இடங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதை தடை செய்யாது.

5.7.2. முப்பது அல்லது பதினெட்டு விழுக்காடு கணக்கிடுகையில் பின்னப்பகுதி பாதிக்கு குறைந்தால் கணக்கில் எடுக்கக் கூடாது. பாதி அல்லது பாதிக்கு மேலிருந்தால் ஒன்றாகக் கருதப்படும்.

5.7.3. இந்த விழுக்காடு கணக்கிடுவதற்கு நிர்வாகக்குழுவில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். (சட்டம் பிரிவு 33(1) & (2) )

**6. நிர்வாகிகள் (Office bearers of the board) தேர்தல்– (விதி53)**

6.1. தேர்தல் ஆணையத்தால், சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர், சங்க நிர்வாகிகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு ஓர் அரசு அலுவலர் அல்லது அவர் கீழ் பணியாற்றும் அலுவலர், அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் (local authorities) அல்லது மத்திய அரசு அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் (undertakings) அல்லது கல்வி நிறுவனங்கள் (educational institutions) ஆகியவற்றின் பணியாளர்களை தேவையான எண்ணிக்கையில் தேர்தல் அலுவலராக (Election Officer) நியமிக்க வேண்டும். மாவட்ட

தேர்தல் அலுவலர், மாற்று தேர்தல் அலுவலர் (Alternative Election Officer) ஒருவரையும் நியமிக்கலாம். (விதி 53 (1) (a) )

6.2. நியமனம் செய்யப்பட்ட தேர்தல் அலுவலர், உடல் நலமின்மை மற்றும் தவிர்க்க முடியாத இதர காரணங்களினால் (unavoidable reason), தேர்தலை நடத்துவதற்கு இயலவில்லை என்றால், மாற்றுத் தேர்தல் அலுவலர், தேர்தல் அலுவலரால் விட்டுச் செல்லப்பட்ட நிலையிலிருந்து, அத்தேர்தலை தொடர்ந்து நடத்துவார். இம்மாதிரியான நிகழ்வுகளில் இவ்விதியில் தேர்தல் அலுவலருக்கு கூறப்பட்டுள்ள அனைத்தும் இம்மாற்றுத் தேர்தல் அலுவலருக்கும் பொருந்தும்.

(விதி 53(1) (b) )

6.3. நிர்வாகக் குழு உறுப்பினர்களின் தேர்தல் முடிவுற்றவுடன் சங்க நிர்வாகிகளின் தேர்தலை நடத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் கூட்டமொன்றை கூட்டுவதற்கு தேர்தல் அலுவலர் ஏற்பாடு செய்யவேண்டும்.

(விதி 53 (2) )

6.4. இக்கூட்டம் கூட்டப்படுவதற்கு குறைந்தபட்சம் 3 முழு நாட்கள் அறிவிப்புத் தரவேண்டும்.

(விதி 53 (3) (a) )

6.5. இக்கூட்டத்திற்கான அறிவிப்பை தேர்தல் அலுவலர் நிர்வாகக்குழு உறுப்பினர்களிடம் நேரடியாகக் கொடுத்தோ அல்லது வழங்கியோ (giving or tendering), ஒப்புதல் பெற வேண்டும். அவ்வாறு இயலாத நிலையில் நிர்வாகக்குழு உறுப்பினரின் குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த குடும்ப உறுப்பினரிடம் (adult member) அவருடைய ஒப்புகை (acknowledgment) பெற்று கொடுக்கவோ அல்லது வழங்கவோ வேண்டும்.

(விதி 53 (3) (b) )

6.6 இந்த அறிவிப்பு சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையிலும் வெளியிடப்பட வேண்டும்.

(விதி 53 (3) (c) )

6.7. சங்கத் தலைமை நிர்வாக அலுவலரையோ (Chief Executive Officer), அவர் இல்லாத நிலையில் சங்கத் தலைவரையோ, இத்தேர்தலுக்கான அறிவிப்பை தேர்ந்தெடுக்கப்பட்ட, நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள தேர்தல் அலுவலர் கேட்டுக்கொள்ளலாம்.

(விதி 53 (3) (d) )

6.8. இந்த அறிவிப்பு அனுப்புவதற்கு செலவுகள் ஏதேனும் இருப்பின் அதனைச் சங்கம் ஏற்கவேண்டும். (விதி 53 (3) (e) )

6.9. விதி 53(2)ன் கீழ் கூட்டப்பட்ட இக்கூட்டத்திற்கு தேர்தல் அலுவலர் தலைமை வகிப்பார்.

(விதி 53 (4) (a) )

6.10 நிர்வாகிகள் தேர்தலுக்கான வேட்புமனு, படிவம் 23ல் இருக்கவேண்டும். இந்த வேட்புமனுவினை, தேர்தல் அலுவலரிடம், வேட்பாளரோ அல்லது அவரை முன்மொழிபவரோ அல்லது வழிமொழிபவரோ, நேரடியாகக் கொடுக்க வேண்டும். (விதி 53 (4) (b) )

6.11.வேட்பு மனுக்கள் மீது மறுப்புகள் ஏதேனும் தெரிவிக்கப்படும் நிலையில், தேவையென்று கருதினால், அதன் மீது அவர் ஒரு சுருக்கமான விசாரணை (summary enquiry) மேற்கொண்டு, எழுத்து மூலமாக முடிவெடுத்து (decide in writing), போட்டியிடத் தகுதியுள்ள வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் பெயரை அறிவிக்கவேண்டும். எந்த வேட்பாளரும் தனது வேட்புமனுவினை, அவரே நேரில் (in person) தேர்தல் அலுவலரிடம், தனது கையொப்பமிட்ட ஓர் அறிவிப்பை (notice signed by him) வழங்கி, திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்; அல்லது அவரை முன்மொழிந்தவரோ அல்லது வழி மொழிந்தவரோ வேட்பு மனு தாக்கல் முடிந்தவுடன் வேட்புமனு திரும்பப் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள்ளாக

அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். வேட்புமனு திரும்பப் பெறுவதற்கான அறிவிப்பினை ஒரு முறை தந்துவிட்டால் அதுவே இறுதியானதாகும் (final).

(விதி 53 (4) (c) )

6.12. எந்த ஒரு பதவிக்கும், தகுதியுள்ள வேட்பாளர் ஒருவருக்கு மேல் இல்லை என்றால் அத்தகுதியுள்ள வேட்பாளரையே முறையாகத் தேர்வு செய்யப்பட்டவராக தேர்தல் அலுவலர் அறிவிக்கவேண்டும். (விதி 53 (5) )

6.13 தகுதியுள்ள வேட்பாளர் ஒருவருக்கு மேல் இருப்பாரெனில், ஒவ்வொரு தகுதியுள்ள வேட்பாளருக்கும், அவரது ஆங்கிலப் பெயரின் அகர வரிசைப்படி, வரிசை எண் ஒதுக்கி உடனடியாக வாக்குச்சீட்டுகள் வழங்கி வாக்குப்பதிவு நடத்திட ஏற்பாடு செய்யவேண்டும். வாக்குப்பதிவு நடைபெறும் தேர்தலில், கீழ்வரும் முறையில், இரகசியமான வாக்குப்பதிவாக (secret ballot) இருக்கவேண்டும். மாற்றாள் முறையில் (proxy) வாக்குப்பதிவு இருத்தல் கூடாது.

(1) தகுதியுள்ள வேட்பாளர்களின் பெயர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண்களுடன் கூட்டம் நடக்கும் இடத்தில் (place of meeting) நன்கு தெரியும்படியாக (prominently) வெளியிடப்படவேண்டும்.

(2) ஒவ்வொரு வாக்குச் சீட்டிலும், ஒவ்வொரு பதவிக்கும் (office) போட்டியிடும் தகுதியான வேட்பாளரின் பெயர் மற்றும் அவருக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண் இருக்கவேண்டும்; தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய ஒப்பமும் இருத்தல் வேண்டும்.

(3) உறுப்பினர்கள் வாக்குச்சீட்டில் அவர்கள் வாக்களிக்க விரும்புவோரின் வரிசை எண்ணுக்கு எதிரே உரிய குறியீடு (x அல்லது +) செய்து அதனை வாக்குப்பெட்டியில் போட வேண்டும்.

(விதி 53 (6) (a) )

6.14. ஒரு உறுப்பினரின் வாக்களிக்கும் உரிமை பற்றி ஏதேனும் மறுப்புகள் இருக்குமெனில் தேர்தல் அலுவலர் தேவையென்று கருதினால் அதன் மீது ஒரு சுருக்கமான விசாரணை (summary) மேற்கொண்டு எழுத்து மூலமான முடிவெடுத்தல் வேண்டும்.

(விதி 53(6) (b) )

6.15 உறுப்பினர்கள் தங்களது வாக்குப்பதிவினை மேற்கொண்டவுடன், தேர்தல் அலுவலர், வாக்குப்பெட்டியைத் திறந்து பதிவான வாக்குகளை எண்ணவேண்டும்.

(விதி 53 (7) )

6.16 கீழ்வரும் நேர்வுகளில் வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படவேண்டும்.

(1) வாக்களித்த உறுப்பினரின் அடையாளம் தெரியும் வகையில் ஏதாவது குறியீடு இருந்தால் அல்லது

(2) அதில் வாக்கு ஏதும் பதிவு செய்யப்படாமலிருந்தால்; அல்லது

(3) ஒன்றுக்கும் மேலான வேட்பாளருக்கு வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தால்; அல்லது

(4) தேர்தல் அலுவலரால், வழங்கப்படாத வாக்குச் சீட்டாக இருந்தால்; அல்லது

(5) எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது என்று சந்தேகம் தரும் வகையில் முத்திரையிடப்பட்டிருந்தால் அல்லது

(6) தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் இல்லாமலிருந்தால்; அல்லது

(7) உண்மையான (genuine) வாக்குச் சீட்டுதானா என்று அறிய முடியாத அளவிற்கு சிதைந்தோ, சேதமடைந்தோ இருந்தால்.

6.17 மேலே இனம் (7)ல் சொல்லப்பட்ட குறையானது தேர்தல் அலுவலரின் தவறுதலினாலோ (mistake) அல்லது விடுதலினாலோ, (failure) ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் அலுவலர் கருதும் நிலையில், அக்காரணத்திற்காக மட்டும் அந்த வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படக்கூடாது.

6.18 வாக்குச்சீட்டில், குறிப்பிட்ட வேட்பாளருக்குத்தான் வாக்காளர் வாக்களிக்க விருப்பப்பட்டுள்ளார் என்பது தெளிவாக அறியக்கூடிய நிலையில், அவரால் இடப்பட்ட குறியீடு

(mark) தெளிவாக இல்லை, ஒரு முறைக்குமேல் இடப்பட்டுள்ளது என்ற காரணங்களினால் மட்டும் அந்த வாக்குச்சீட்டினை நிராகரித்தல் கூடாது (விதி **53 (8)** (a) )

6.19 வாக்குச்சீட்டினை தள்ளுபடி செய்யும் அதிகாரம் தேர்தல் அலுவலருக்கு மட்டுமே உண்டு.

(விதி **53 (8)** (b) )

## 7. வேட்பாளர் தகுதியின்மைகள் (சட்டப்பிரிவு 34)

7.1. கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினராகப் போட்டியிடுவோர் தகுதியின்மை பற்றி சட்டப்பிரிவு **34**ல் குறிப்பிடப்பட்டுள்ளவை இங்கு சுருக்கமாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**(1)** அந்தச் சங்கத்தின் சம்பளம் பெறும் பணியாளருக்கு நெருங்கிய உறவினராய் இருக்கக் கூடாது. எவை எவை நெருங்கிய உறவு என்று விதி **63**இல் தொகுத்துச் சொல்லப்பட்டுள்ளது. நெருங்கிய உறவுகளின் பட்டியல் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

**(2)** அந்தச் சங்கத்திற்கோ அல்லது வேறு எந்தவொரு சங்கத்திற்கோ மூன்று மாத காலத்திற்கு மேல் தவணை தவறி உள்ளவராக இருக்கக் கூடாது. அவரால் பெறப்பட்ட கடன், அல்லது கடன் அடிப்படையில் வாங்கியவற்றிற்குச் செலுத்த வேண்டிய தவணைத் தொகைகளை மூன்று மாத காலத்திற்கு மேல் செலுத்தாமல் இருந்தால் தேர்தலில் போட்டியிட முடியாது.

**(3)** சங்கத்தின் பிரதிநிதியாக இருந்தால், அந்தச் சங்கம் நிதியுதவி வங்கிக்கு அல்லது பிரிதொரு சங்கத்திற்கு **30**%க்கு மேலாக தவணை தவறிய நிலுவையை தொடர்ச்சியாக ஓராண்டிற்கு மேல் வைத்திருந்தால் அவர் தேர்தலுக்கு போட்டியிட இயலாது. எனவே தவணை தவறியுள்ள தொடக்க கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலில் போட்டியிட முடியாது.

(4) எந்த ஒரு நபருக்கு எதிராக சட்டப்பிரிவு 143இல் சொல்லப்பட்டுள்ள தீர்ப்பாணை, முடிவு, தீர்ப்பு, ஆணை அல்லது சான்றிதழ் பெறப்பட்டிருக்கிறதோ அவர் தேர்தலில் போட்டியிட இயலாது.

(5) சங்கத்திற்காக அல்லது அதற்கு எதிராக அல்லது இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ள எந்த ஒரு சங்கத்திற்காக அல்லது அதற்கு எதிராக வழக்குரைஞராக நியமிக்கப்பட்டிருந்தால் அவர் தேர்தலில் போட்டியிட முடியாது.

(6) ஒரு நபருக்கு எதிராக கடனை வசூலிப்பதற்காக சட்டப்பிரிவுகள் 118, 119, 120 அல்லது 144இன் கீழ் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அவர் தேர்தலில் போட்டியிட முடியாது.

(7) கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் பணியாளரோ அல்லது அதன் நிர்வாகப் பணி அல்லது தணிக்கைப் பணியில் ஈடுபட்டிருந்த அரசு அலுவலரோ பணியிலிருந்து விடுபட்ட இரண்டாண்டு காலம் வரை தேர்தலில் போட்டியிட முடியாது.

(தொடர்புடைய துறைகளின் அலுவலர் பணி ஒழுங்குமுறை விதி மற்றும் அரசாணைக்குட்பட்டதாகும்).

(8) இணை உறுப்பினராகவோ (associate member) உரிய வயது வராதவராகவோ (minor) அல்லது சித்த சுவாதீனம் அற்றவராகவோ (unsound mind) இருந்தால் அவர் தேர்தலில் போட்டியிட முடியாது.

(9) ஒருவர் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்டிருந்தால், அவர் அத்தண்டனை முடிவுற்ற நாளிலிருந்து மூன்றாண்டு வரை தேர்தலுக்கு போட்டியிட முடியாது.

(10) ஒருவர், எந்த ஒரு சட்டத்தின் கீழும் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கப்படத்தக்க ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட குற்றத்திற்காக (moral turpitude) தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அத்தண்டனைக் காலம் முடிவுற்ற நாளிலிருந்து ஐந்தாண்டு வரை தேர்தலில் போட்டியிட முடியாது.

(11) ஒருவர் சங்கத்தின் குழு உறுப்பினர் பதவியிலிருந்து சட்டப்பிரிவு 36இன்கீழ் அகற்றப்பட்டிருந்தால் அல்லது அப்பதவி வகிப்பதற்குத் தகுதியற்றவராக ஆக்கப்பட்டிருந்தால், அவர் எப்போதும் தேர்தலில் போட்டியிட முடியாது.

(12) தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லது அப்பகுதியில் அரசு குறிப்பிடக் கூடிய மொழியை எழுதப்படிக்கத் தெரியாத எவரும் தேர்தலில் போட்டியிட முடியாது.

(13) மேற்சொன்ன 12 வகையான தகுதியின்மைகளைத் தவிர குறுகியகாலக் கடன் அமைப்பு சங்கங்களைப் பொருத்தவரை (அதாவது தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள்) சட்டப்பிரிவு 136-D இல் கீழ்க்காணும் தகுதியின்மைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அ. நிர்வாகக் குழு கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க நிர்வாகக் குழு உறுப்பினராய் இருந்த எந்த ஒரு நபரும் நிர்வாகக் குழு கலைக்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டு காலத்திற்கு மீண்டும் அச்சங்க தேர்தலில் போட்டியிட முடியாது.

பிரிவு 136–D (13) (c)

ஆ. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நிர்வாகக் குழுவுக்கு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கமல்லாத பிரிதொரு சங்கத்தின் பிரதிநிதியாக இருப்பவர், அந்த பிரிதொரு சங்கம் அவ்வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை தொண்ணூறு நாட்களுக்கும் மேலாக செலுத்தத் தவறியிருந்தால் தேர்தலில் போட்டியிட முடியாது. (பிரிவு 136-D (11) (i))

இ. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நிர்வாகக் குழுவிற்கு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பிரதிநிதியாக இருப்பவர், அந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்

அவ்வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை ஓராண்டு காலத்திற்கும் மேலாக செலுத்த தவறியிருந்தால் தேர்தலில் போட்டியிட முடியாது. (பிரிவு 136-D (11) (ii))

உ. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாமல் பாக்கி வைத்துள்ள எந்தவொரு நபரும், அந்த பாக்கியை முழுமையாக செலுத்தி தீர்க்காத வரை எந்தவொரு குறுகியகால கடன் அமைப்பு சங்க நிர்வாகக் குழு தேர்தலில் போட்டியிட முடியாது.

(பிரிவு 136-D (11) (ii)

ஊ. நிர்வாகக் குழு கலைக்கப்பட்டுள்ள சங்கத்தின் பிரதிநிதியாக இருக்கும் எந்தவொரு நபரும் எந்தவொரு குறுகியகாலக் கடன் அமைப்பு சங்கத்தின் நிர்வாகக் குழு தேர்தலில் போட்டியிட முடியாது.

(பிரிவு 136-D (11) (iii)

## 8. தேர்தல் தொடர்பான குற்றச் செயல்கள் மற்றும் தண்டனைகள் (பிரிவு 162)

8.1. சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்தல் மற்றும் நிர்வாகிகள் தேர்தல் ஆகியவற்றை சுதந்திரமான, முறையான வகையில் (free and fair) நடைபெறுவதை தேர்தல் பணியாற்றும் அனைத்து அலுவலர்களும் உறுதி செய்தல் வேண்டும்.

8.2. இத்தேர்தல்களில் முறையற்ற நடவடிக்கைகளில் (corrupt practice) ஈடுபடும் எந்தவொரு நபரும் கூட்டுறவுச் சட்டம் பிரிவு 162-ன் கீழ் தண்டனைக்கு உள்ளாவர்.

8.3. அடியிற்கண்டவைகள் பிரிவு162-ன் கீழ் குற்றச் செய்கைகள் (corrupt practice) என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(1) எந்தவொரு வேட்பு மனுவினையும் மோசடியாக (fraudulently) நாசப்படுத்துதல் (defaces) மற்றும் அழித்தல் (destroy);

(2) அதிகாரம் பெற்ற மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு நபராலும் ஒட்டப்பட்ட பட்டியல், அறிவிப்பு அல்லது இதர ஆவணங்களை, மோசடியாக நாசம் செய்தல், அழித்தல் அல்லது அகற்றுதல்;

(3) வாக்குச்சீட்டு மற்றும் வாக்குச்சீட்டில் உள்ள குறி, அல்லது அடையாளம் குறித்த உறுதிமொழி ஆகியவற்றை மோசடியாக நாசப்படுத்துதல், அழித்தல்;

(4) உரிய அதிகாரமின்றி எந்தவொரு நபருக்கும் வாக்குச்சீட்டு வழங்குதல், அல்லது எந்தவொரு நபரிடமிருந்தும் வாக்குச்சீட்டைப் பெறுதல், அல்லது வாக்குச்சீட்டினை வைத்திருத்தல்;

(5) அங்கீகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டு அல்லாமல் வேறு ஏதேனும் பொருட்களை வாக்குப்பெட்டியில் போடுதல்.

(6) உரிய அதிகாரமின்றி தேர்தலுக்கான பயன்பாட்டிலுள்ள எந்தவொரு வாக்குப்பெட்டியினை அல்லது வாக்குச்சீட்டுகளை உரிய அதிகாரமின்றி அழித்தல், எடுத்தல், திறத்தல் அல்லது குறுக்கீடு செய்தல்;

(7) மோசடியாகவோ, அல்லது முறையான அதிகாரமின்றியோ (due authority), மேற்கண்ட செய்கைகளைச் செய்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு, நன்கு தெரிந்து உதவியாகவும் உடந்தையாகவும் (wilfully aids and abets) இருத்தல்; அல்லது

(8) அடியிற்குறிப்பிட்ட செயல்களை உள்ளடக்கிய சில செயல்களைச் செய்யும் நோக்கத்துடன், எந்தவொரு நபருக்காவது, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பரிசு (gift) வழங்குதல் மற்றும் ஏதேனும் சன்மானம் (gratification) வழங்குவதாக உறுதியளித்தல்:

(i) தேர்தலில் ஒருவர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு அல்லது போட்டியிடாமல் இருப்பதற்கு அல்லது போட்டியிலிருந்து விலகிக் கொள்வதற்கு (withdraw) அல்லது விலகாமல் இருப்பதற்கு அல்லது

(ii) ஓர் உறுப்பினர் தேர்தலில் வாக்களிக்க அல்லது வாக்களிக்காமல் இருக்க அல்லது ஒரு நபர் தான் வேட்பாளராக போட்டியிட்டதற்கு அல்லது போட்டியிடாமல் இருந்ததற்கு அல்லது தனது வேட்பு மனுவினை திரும்ப பெற்றதற்கு அல்லது பெறாமாலிருந்ததற்கு அல்லது

(iii) ஓர் உறுப்பினர் தேர்தலில் வாக்களித்ததற்கு அல்லது வாக்களிக்காமல் இருந்ததற்கு.

8.4 **குற்றச் செயலுக்கான தண்டனை**

இப்பிரிவின் கீழான குற்றச் செய்கை புரிவோர், இப்பிரிவின்கீழ் ஓராண்டுவரை சிறைத் தண்டனை அல்லது ரூபாய் பத்தாயிரம் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனைக்குரியவராவர்.

## 9. தேர்தல் ஆணையம் ( சட்டப்பிரிவு எண்.33A மற்றும் விதி எண் 52-A)

9.1. தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு (superintendence direction and control), கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு (board) மற்றும் நிர்வாகிகள் (office bearers) தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல் (electoral rolls) தயாரித்தலும், தேர்தல்களும் நடைபெறுதல் வேண்டும்.

9.2. மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அல்லது நிர்வாக நடுவர் (Executive Magistrate) அல்லது எந்தவொரு காவல் அலுவலர் (Police Officers), ஆகியோருக்கு, தேவையென்று கருதும் நிலையில், தேவைப்படும் கட்டளைகள் இடும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு உண்டு.

9.3. சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் (office bearers) தேர்தல் தொடர்பாக, பணியாற்ற நியமனம் செய்யப்பட்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும், சங்கங்களின் அத்தேர்தல்களை நடத்துவதற்கும், எந்த ஒரு கட்டளையையும் நெறிகாட்டுதலையும், வழிமுறைகளையும் (direction guidelines or instructions) வழங்கிடும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு உண்டு.

9.4. தேவைப்படும் நேர்வில், அலுவலர்களுக்கு, தனது கட்டுப்பாடு மற்றும் சீராய்வுக்குட்பட்டு (Control and revision), தனது அதிகாரங்களை தேர்தல் ஆணையம் வழங்கலாம்.

9.5. **மாநிலத் தேர்தல் அலுவலர் (State Election Officer)**

கூட்டுறவுச் சட்டம் பிரிவு (3)ன் கீழ் அரசால் பதிவாளர்களாக (Registrar) நியமிக்கப்பட்ட அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வரும் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை, மாநிலத் தேர்தல் அலுவலர்களாக நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட மாநிலத் தேர்தல் அலுவலர், தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் நிர்வாகக்குழு மற்றும் நிர்வாகிகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு ஒருங்கிணைந்து மேற்பார்வையிடல் (coordinate and supervise) வேண்டும். தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பணிகளையும் அவர்கள் செய்து வரவேண்டும்.

9.6. **மாவட்ட தேர்தல் அலுவலர்கள் (District Election Officers)**

கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் பணிநிலைக்கு குறையாத நிலையிலுள்ள கூட்டுறவுத்துறை அலுவலர்கள் அல்லது அப்பணி நிலைக் குறையாத பணியிலுள்ள இதர அரசுதுறையைச் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோரை மாவட்ட தேர்தல் அலுவலராக தேர்தல் ஆணையம் நியமிக்கலாம். அவர்கள், தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்துதல்

மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டபடி, அவர்களது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் சங்கங்களின், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல், நிர்வாகக்குழு மற்றும் நிர்வாகிக்களுக்கான தேர்தல்கள் நடத்துதல் போன்றவற்றை ஒருங்கிணைத்து மேற்பார்வையிடல் வேண்டும் (Coordinate and supervise). தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பணிகளையும் அவர்கள் செய்து வரவேண்டும்.

9.7. **அயல்பணி (on deputation)**

மாவட்ட தேர்தல் அலுவலர்கள், வாக்காளர் பட்டியல் அலுவலர்கள் (Electoral Officer), தேர்தல் அலுவலர்கள், வாக்குப் பதிவு அலுவலர்கள், விதிகளின்கீழ் நியமிக்கப்பட்ட இதர அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு அரசால் தேர்தல் நடத்துவதற்காக குறிக்கப்பட்ட காலத்திற்கு நியமிக்கப்பட்ட (Designated) எந்தவொரு காவல் அதிகாரி ஆகியோர் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் (Electoral rolls) தயாரிக்கும் நாளிலிருந்து அது முடியும் வரையிலும் மற்றும் தேர்தல் அறிவிப்பு நாளிலிருந்து (notification calling for such election) அத்தேர்தல் முடியும்நாள் வரையும் தேர்தல் ஆணையத்திற்கு அயற்பணிக்கு அனுப்பப்பட்டவர்களாகக் கருதப்படுவர். இந்த அலுவலர்கள் அக்கால அளவில் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் நெறிப்படுத்துதல் ஆகியவற்றிற்கு உட்பட்டவராவர்.

9.8. **தேர்தல் பார்வையாளர் (observer)**

ஒரு மாவட்டம் அல்லது வருவாய் கோட்டம் அல்லது வருவாய் கோட்டத்தின்பகுதி ஆகியவற்றில் உள்ள கூட்டுறவுச் சங்கம் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் தொகுதிக்கான தேர்தல் அல்லது தேர்தல்களை கண்காணிக்கவும் மற்றும் தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் பணிகளைச் செய்வதற்கும் ஒரு பார்வையாளரை (observer), தேர்தல் ஆணையம் நியமனம் (nominate) செய்யலாம்.

9.9. கீழ்வரும் காரணங்களினால் ஒரு வாக்குச்சாவடியிலோ, இடத்திலோ, நடைபெற்ற வாக்கு எண்ணிக்கை முடிவினை (result) உறுதிப்படுத்த (ascertain) இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல் பணி தொடர்பாக நியமிக்கப்பட்ட பார்வையாளர் கருதும் நேர்வில் தேர்தல் முடிவை அறிவிப்பதற்கு முன்பாக எந்த நேரத்திலும் வாக்கு எண்ணிக்கையை நிறுத்தச் சொல்லவோ அல்லது முடிவினை அறிவிக்காமலிருக்கவோ, தேர்தல் அலுவலருக்கு பார்வையாளர் கட்டளையிட அதிகாரம் படைத்தவராவார்.

(1) அதிக எண்ணிக்கையிலான வாக்குச்சாவடிகள், வாக்களிக்கும் இடங்கள் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டிருந்தால் (booth capturing); அல்லது

(2) வாக்களிக்க நிர்ணயம் செய்யப்பட்ட இடங்கள் மற்றும் வாக்குச்சாவடியில் பயன்பாட்டிற்குரிய வாக்குச்சீட்டுகள் தேர்தல் அலுவலரிடமிருந்து சட்ட விரோதமாக பறித்து செல்லப்பட்டிருந்தால் (taken out); அல்லது

(3) வாக்கு எண்ணிக்கை முடிவதற்கு முன்னர் வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுகளை தேர்தல் அலுவலரிடமிருந்து சட்ட விரோதமாக பறித்துச் செல்லப்பட்டிருந்தால்; அல்லது

(4) தற்செயலாகவோ (accidentally) அல்லது வேண்டுமென்றோ வாக்குச்சீட்டுகள் அழிக்கப்பட்டு, தொலைக்கப்பட்டு, (lost) மோசடியாகத் திருத்தம் (tampering) செய்யப்பட்டிருந்தால்.

9.10. தேர்தல் அலுவலருக்கு, வாக்கு எண்ணிக்கையை நிறுத்தவோ தேர்தல் முடிவினை அறிவிக்காமல் இருக்கவோ, பார்வையாளர் கட்டளையிட்டிருந்தால், அதனை அவர் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து, மாநிலத் தேர்தல் ஆணையம்,

ஏற்பட்டுள்ள அனைத்து சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, மேற்கொண்டு அத்தேர்தல் நடத்தி முடிப்பதற்கான உரிய அறிவுரைகளை வழங்கவேண்டும்.

9.11. கூட்டுறவுச் சட்டம் மற்றும் தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வழங்கப்படும் ஆணைகளின்படியும் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்துகை மற்றும் கட்டுப்பாட்டின்கீழ், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர் ஆகியோர் கூட்டுறவுச் சங்கத்திற்கான தேர்தல்கள் முறையாக நடத்துவதற்குப் பொறுப்பாவார்.

9.12 தேர்தல் ஆணையம், தானாகவோ அல்லது ஒரு புகாரின் பேரிலோ அல்லது பார்வையாளரின் அறிக்கையின்படியோ, ஒரு மாவட்ட தேர்தல் அலுவலர் அல்லது வாக்காளர் பட்டியல் அலுவலர் அல்லது தேர்தல் அலுவலர் வேண்டுமென்றோ அல்லது தவறுதலாகவோ (omission) சுதந்திரமான மற்றும் முறையான தேர்தல் நடத்துவதற்கு ஏதேனும் ஊறு (detrimental) விளைவித்துள்ளார் என்று கருதும் நிலையிலோ, தேர்தல் ஆணையம் இவ்வாறான அலுவலரை திரும்ப அழைக்கவும் (recall), வேறொரு தகுதிவாய்ந்த அலுவலரை அவருடைய இடத்தில் நியமித்து, ஏற்கெனவே தேர்தல் ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட தேர்தல் திட்டத்தின்படி தேர்தல் நடத்தலாம்.

9.13. **பொது அல்லது சிறப்புக் கட்டளைகள் (general or special directions)**

தேர்தல் ஆணையம், தேவை எனக் கருதுமானால், இத்தேர்தல் குறித்த விதிகள் உரிய வகையில் செயல்படுத்தப்படுவது பற்றி, கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் தேர்தல் நடத்துவது தொடர்பாக பொது அல்லது சிறப்புக் கட்டளைகள் (general or special direction) வழங்கலாம்.

9.14 விதிகள் 52, 52A மற்றும் 53ல் குறிப்பிட்டுள்ள சரத்துக்களை செயல்படுத்துவதிலோ அல்லது தேர்தல் நடத்துவதிலோ சிரமங்கள் இருக்குமென்றால், தேவைப்படும் நேர்வுகளில்,

அவற்றை நீக்குவதற்கு தேர்தல் ஆணையம் கருதும் உரிய நடவடிக்கைகளை, மேற்கொள்ள தேர்தல் ஆணையம் ஆணையிடலாம்.

9.15 தேர்தல் ஆணையம் மற்றும் மாநில தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் வாக்காளர் பட்டியல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர் ஆகியோர் விதிகளின்கீழ் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் தேர்தல் நடத்துவதற்காக வழங்கிய ஆணைகள் மற்றும் கட்டளைகள் அனைத்தும் விதிகளுக்கு மாறாக இல்லாத நிலையில் அவ்விதிகளின்கீழ் வழங்கப்பட்டதாகவே கருதப்படும்.

# 10. இணைப்புகள்

## இணைப்பு -1

**<u>படிவம் எண்.18</u>**

(தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில், விதி 52(8) (எ) யைப் பார்க்க)

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 33(11)ன்படி

**கூட்டுறவுச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பு மனு**

1. வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுகின்ற சங்கத்தின் பெயர் :
2. வாக்காளர் தொகுதியின் பெயர் (ஏதேனும் இருப்பின்) :
3. (1) வேட்பாளரின் பெயர் :

   (2) பாலினம் (Sex) :

   (3) உறுப்பினர் எண் :

   (4) அவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினரைச் சார்ந்தவரா? :

   (5) அவ்வாறாயின் அவர் சார்ந்துள்ள இனம் அல்லது பழங்குடியின் பெயர் (Particular Caste / Tribe) :

   (6) கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியாக உள்ளவராயின் அச்சங்கத்தின் பெயர் :
4. தகப்பனார் / கணவர் பெயர் :
5. வேட்பாளரின் முழு முகவரி :
6. (1) முன்மொழிபவரின் பெயர் :

   (2) உறுப்பினர் எண். :

   (3) கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியாக இருந்தால் எந்தச் சங்கத்தின் பிரதிநிதியாகவுள்ளாரோ அச்சங்கத்தின் பெயர் :
7. முன்மொழிபவரின் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகைப் பதிவு :

8. (1) வழிமொழிபவரின் பெயர் :

(2) உறுப்பினர் எண் :

(3) கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியாக இருந்தால் எந்தச் சங்கத்தின் பிரதிநிதியாகவுள்ளாரோ அச்சங்கத்தின் பெயர் :

9. வழிமொழிபவரின் கையொப்பம் அல்லது பெருவிரல் ரேகைப் பதிவு :

**வேட்பாளரின் உறுதிமொழி**

நான் தேர்தலில் நிற்க விரும்புகிறேன் என்றும், கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிட்டுள்ள தகுதியின்மை எதுவும் எனக்கு இல்லை என்றும் உறுதியாகக் கூறுகின்றேன்.

நான் சார்ந்துள்ள இனம் அல்லது பழங்குடியானது மாநிலத்தில் எனது சொந்த ஊர் (Native Place) சம்பந்தப்பட்டமட்டில், ஆதிதிராவிடம் மற்றும் பழங்குடியினராக அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது என்றும் உறுதி கூறுகிறேன்.

**வேட்பாளரின் கையொப்பம்**

**தேர்தல் அலுவலரின் மேற்குறிப்பு**

இந்த வேட்பு மனு……………(இடம்)…………………….(நாள்)…………….

(நேரம்)…………என்பவரால் (வேட்பு மனுவைத் தேர்தல் அலுவலரிடம் கொடுக்கின்றவர் பெயர்) என்னிடம் நேரில் தாக்கல் செய்யப்பட்டது.

தேர்தல் அலுவலரின் கையொப்பம்.

**இணைப்பு -2**

**<u>படிவம் எண்.19</u>**

**(1988** ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் விதி எண்.**52** உபவிதி **(8)** கூறு (எச்)யைப் பார்க்க,

**வேட்பு மனுவை திரும்பப் பெற்றதற்கான அறிவிப்பு**

…………………..மாவட்டம்……………………..வட்டம்……………………………….

கூட்டுறவுச் சங்கத்தின்……………………..தொகுதியிலிருந்து நிர்வாகக் குழுவிற்கு தேர்தல்.

பெறுநர்

தேர்தல் அலுவலர்,

………………………

……………………….. மேற்படி தேர்தலில் வேட்பாளராகிய…………….. ……… (வேட்பாளர் பெயர்) என்ற நான் என்னுடைய வேட்பு மனுவை திரும்ப பெற்றுள்ளேன் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம்

நாள்

வேட்பாளரின் கையொப்பம்.

## தேர்தல் அலுவலரின் மேற்குறிப்பு

இந்த அறிவிப்பு………………மணிக்கு…………….(நாள்) வேட்பாளர்/முன்மொழிபவர்/ வழி மொழிபவர்…………………(பெயர்) ஆல் என்னிடத்தில் என்னுடைய அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது.

நாள் தேர்தல் அலுவலரின் கையொப்பம்.

**இணைப்பு-3**

## <u>படிவம் எண்.20</u>

(1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள்

விதிகள் விதி எண்.52 உபவிதி (8) கூறு (ஐ)யைப் பார்க்க)

## போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பட்டியல்

.........................மாவட்டம்........................வட்டம்.............................

கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழுவுக்கு...............................................

தொகுதியிலிருந்து தேர்தல்

| ஒதுக்கப்பட்ட வரிசை எண் | வேட்பாளரின் பெயர் | பாலினம் | வேட்பாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவர்/சார்ந்தவர் அல்ல | வேட்பாளரின் முகவரி | வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |

இடம் :

நாள் : தேர்தல் அலுவலரின் கையொப்பம்.

## இணைப்பு- 4

**<u>படிவம் எண்.21</u>**

(1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் விதி எண்.52 உபவிதி (10) உட்கூறு (சி)யைப் பார்க்க)

# தேர்தல் முகவர் நியமனம்

மாவட்டம் வட்டம் கூட்டுறவுச் சங்கத்தின் தொகுதியிலிருந்து நிர்வாகக் குழுவிற்குத் தேர்தல்

பெறுநர்

தேர்தல் அலுவலர்

…………

……………….மேற்படி தேர்தலுக்கு வேட்பாளராகிய………………………………….

(வேட்பாளர் பெயர்) என்ற நான் இன்றைய நாளிலிருந்து மேற்சொன்ன தேர்தலில் என்னுடைய தேர்தல் முகவராக…………………சார்ந்த திரு……………………இதன் மூலம் நியமித்துள்ளேன் என்று அறிவிக்கின்றேன்.

இடம் :

நாள் : வேட்பாளரின் கையொப்பம்

மேற்படி நியமனத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இடம்

நாள் தேர்தல் முகவரின் கையொப்பம்

## இணைப்பு- 5

### படிவம் எண்.22

(1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் விதி எண்.52 உபவிதி (10) உட்கூறு (சி)யைப் பார்க்க)

**நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் முடிவுகள் பற்றிய அறிவிப்பு**

- ………………………… கூட்டுறவுச் சங்கம்
- …………………….. வட்டம்
- ……………………… மாவட்டம்
- ……………………… தொகுதிக்கான தேர்தல்

| வேட்பாளரின் பெயர் | வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| (1) | (2) |
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | |

- …………. (வேட்பாளரின் பெயர்)
- …………. (வேட்பாளரின் முகவரி)

என்பவர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார் என நான் அறிவிக்கிறேன்.

ஆம் வருடம் மாதம் நாளிடப்பட்டது

தேர்தல் அலுவலரின் கையொப்பம்.

## இணைப்பு-6

## <u>படிவம் எண்.23</u>

(1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் விதி எண்.53 உபவிதி (4) கூறு (பி)யைப் பார்க்க)

### கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க (Office Bearers) வேட்பு மனு.

1. வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுகின்ற சங்கத்தின் பெயர்
2. தேர்தலில் போட்டியிடுகின்ற பதவியின் பெயர்
3. வேட்பாளரின் பெயர்
4. தகப்பனார் / கணவர் பெயர்
5. வேட்பாளரின் முகவரி
6. முன்மொழிபவரின் பெயரும், முகவரியும்
7. முன்மொழிபவரின் கையொப்பம்
8. வழிமொழிபவரின் பெயரும், முகவரியும்
9. வழிமொழிபவரின் கையொப்பம்

### வேட்பாளரின் உறுதிமொழி

நான் தலைவர்/துணைத்தலைவர் பதவிக்குத் தேர்தலில் நிற்க விரும்புகிறேன் என்றும், சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிட்டுள்ள தகுதியின்மை எதுவும் எனக்கு இல்லை என்றும் உறுதியாகக் கூறுகின்றேன்.

வேட்பாளரின் கையொப்பம்.

### தேர்தல் அலுவலரின் மேற்குறிப்பு

இந்த வேட்பு மனு……………………….(இடம்)……………………….(நாள்) …………..(நேரம்)………………என்பவரால் (வேட்பு மனுவை தேர்தல் அலுவலரிடம் கொடுக்கின்றவர் பெயர்) என்னிடம் நேரில் தாக்கல் செய்யப்பட்டது.

தேர்தல் அலுவலரின் கையொப்பம்.

## இணைப்பு-7

### நெருங்கிய உறவினர்கள்
### (விதி 63ல் குறிப்பிட்டிருப்பவை)

1. மனைவி
2. கணவன்
3. தந்தை (மாற்றாந் தந்தை உட்பட)
4. தாய் (மாற்றாந் தாய் உட்பட)
5. சகோதரர் (மாற்றாந் தாயின் மகன்)
6. சகோதரி (மாற்றாந் தாயின் மகள்)
7. மகன் (மாற்றாம் மகன் உட்பட)
8. மகள் (மாற்றாம் மகள் உட்பட)
9. சகோதரரின் மனைவி
10. சகோதரரின் மகன்
11. சகோதரரின் மகள்
12. சகோதரியின் கணவர்
13. சகோதரியின் மகன்
14. சகோதரியின் மகள்
15. மகனின் மனைவி
16. மகனின் மகன்
17. மகனின் மகள்
18. மகளின் கணவர்
19. மகளின் மகன்
20. மகளின் மகள்
21. மனைவியின் தந்தை

22. மனைவியின் தாய்

23. கணவரின் தந்தை

24. கணவரின் தாய்

25. கணவரின் சகோதரர்

26. கணவரின் சகோதரரின் மனைவி

27. கணவரின் சகோதரரின் மகன்

28. கணவரின் சகோதரரின் மகள்

29. மனைவியின் சகோதரர்

30. மனைவியின் சகோதரரின் மனைவி

31. மனைவியின் சகோதரரின் மகன்

32. மனைவியின் சகோதரரின் மகள்

33. கணவரின் சகோதரி

34. கணவரின் சகோதரியின் கணவர்

35. கணவரின் சகோதரியின் மகன்

36. கணவரின் சகோதரியின் மகள்

37. மனைவியின் சகோதரி

38. மனைவியின் சகோதரியின் கணவன்

39. மனைவியின் சகோதரியின் மகன்

40. மனைவியின் சகோதரியின் மகள்

41. தந்தையின் சகோதரர்

42. தந்தையின் சகோதரரின் மனைவி

43. தந்தையின் சகோதரரின் மகன்

44. தந்தையின் சகோதரரின் மகள்

45. தாயின் சகோதரர்

46. தாயின் சகோதரரின் மனைவி

47. தாயின் சகோதரரின் மகன்

48. தாயின் சகோதரரின் மகள்

49. தந்தையின் சகோதரி

50. தந்தையின் சகோதரியின் கணவன்

51. தந்தையின் சகோதரியின் மகன்

52. 3தந்தையின் சகோதரியின் மகள்

53. தாயின் சகோதரி

54. தாயின் சகோதரியின் கணவன்

55. தாயின் சகோதரியின் மகன்

56. தாயின் சகோதரியின் மகள்

57. தந்தையின் தந்தை

58. தந்தையின் தாய்

59. தாயின் தந்தை

60. தாயின் தாய்

------- xxxx --------